# திருமலைத்தீபம்
Thirumalaitheepam

திருகோணமலை மறைமாவட்டத்தின் மாதாந்த பத்திரிகை

சுடர் – 45
விலை ரூபாய் 20.00

தீபம்–45
கார்த்திகை, மார்கழி இதழ் – 2017.
ஆரம்பம் 15 மாசி–2013.

திருமறைக்கல்வி நடுநிலையம்,
இல: 297 டொக்கியாட்வீதி, திருகோணமலை.

E-mail : catetcota@gmail.com
T.P : 026 2221022, 026 3202532

## விண்ணிலிருந்து விடியல் நம்மைத்தேடி வருகிறது (லூக் - 01 : 79)





**வாழ்வு என்னும் கொடையை ஆசீர்வாதமாகப் பெற்ற நன்நாள்.....**

டிசெம்பர் 09 : பேரருட்திரு யோசேப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை
டிசெம்பர் 17 : திருத்தந்தை பிரான்சிஸ்
டிசெம்பர் 25 : பேரருட்திரு கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை

அன்பு நிலைபெற,
ஆசை நிறைவேற
இன்பம் நிறைந்திட,
ஈடில்லா இந்நாளில்
உள்ளத்தில் குழந்தையாய்,
ஊக்கத்தில் குமரனாய்,
எண்ணத்தில் இனிமையாய்,
ஏற்றத்தில் பெருமையாய், ஐயம் நீங்கி,
ஒற்றுமை காத்து,
ஒரு நூற்றாண்டு அகவைக் கடந்து
நீடுழி வாழ வாழ்த்துகிறோம்.

HAPPY BIRTHDAY

**வாழ்வின் அழைப்பை ஏற்று அர்ப்பணித்த பொன்னான நாள்...**
டிசெம்பர் 20 : பேரருட்திரு ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகையின்
**56வது குருத்துவ நினைவுநாள்**

**இவர்களது பணிவாழ்வு சிறக்க செபிப்போம் வாழ்த்துவோம்.**

திருமலை மறைமாவட்ட
குருக்கள், துறவியர், பொதுநிலையினர்.

## Merry Christmas to You All

## ஆயரின் செய்தி



**கிறிஸ்து இயேசுவின் அன்புள்ள சகோதர சகோதரிகளே ஆண்டவர் இயேசுவின் இனிய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

டிசம்பர் 3ம் திகதி திருவருகைக் காலம் முதல் ஞாயிறு முதல் மீண்டும் நாம் புதிய திருவழிபாட்டு ஆண்டினுள் நுழைகின்றோம். திருவழிபாட்டின் ஒவ்வொரு காலமும் எமக்கு அழகான ஆன்மீக வழிகாட்டலையும் ஒப்பரவிற்கான அழைப்பையும் தருகின்றது. இவற்றை நாம் இன்னுமொரு காலமாக உதாசீனம் செய்து கடந்துபோகாமல் சிறப்பான சந்தர்ப்பமாகவும் மனமாற்றத்திற்கான இறையழைப்பாக ஏற்று எமது நன்மைக்காகப் பயன்படுத்திக்கொள்வோம்.

திருவருகைக்காலம் ஓர் ஆயத்த காலம். இரண்டு வகையான வருகைக்கு நாம் எம்மை ஆயத்தம் செய்கிறோம். முதலாவது, ஆண்டவர் இயேசுவின் இரண்டாம் வருகைக்கான, இறுதித் தீர்வைக்கான எமது ஆயத்தம். நான் தந்தையிடம் செல்கிறேன். மீண்டும் உங்களிடம் உலக முடிவில் இறுதித் தீர்ப்புக்காக வருவேன் என இயேசு தன் சீடர்களுக்குக் கூறிவைத்தார். இரண்டாவது, மானிட சரித்திரத்தில் நடைபெற்ற இயேசுவின் மனித பிறப்பினை நன்றியோடு கொண்டாடுவதற்கான ஆன்மீக ஆயத்தம். கிறிஸ்தவத்தில் எந்த நிகழ்ச்சியானாலும் எமது ஆன்மீக ஆயத்தம் மிக முக்கியம். எனவே இக்காலத்தில் இயேசுவின் வருகைக்காக நாம் எம்மை ஆயத்தம் செய்கின்றோம்.

தொடர்ச்சி 02ம் பக்கத்தில்....

## மட். மறைமாவட்டத்தின் புதிய குரு



04ம் பக்கத்தில்....

## ஆயர் பணியில் வெள்ளி விழா நிறைவு



08ம் பக்கத்தில்....

## மன்னார் மறைமாவட்டத்திற்கு புதிய ஆயர்

செபிப்போம்! வாழ்த்துவோம்!

*Congratulations & Prayerful Wishes*

God Bless you Our Mannar Bishop
His Lordship Most
Rev. Dr. Emmanuel Fidelis Fernando






## இயேசுவோடு 12 மணி நேரம் விசேட நற்கருணை ஆராதனை



இடம் : தூய செபமாலை மாதா ஆலயம், குச்சவெளி.
காலம் : 09 டிசம்பர் 2017 சனிக்கிழமை
நேரம் : மதியம் 12 மணி முதல் இரவு 12 மணி வரை

**திருகோணமலை மறைமாவட்டத் திருச்சபையாக செபத்தில் இணைந்திடுவோம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இதோ உன் மீட்பர் வருகின்றார் (எசா - 62 : 11)**

# உங்களோடு பேசுகிறேன்..

Fr .Nc . அருள்வரதன்



இம்முறை இரண்டு மாதங்களை உள்ளடக்கி உங்களோடு பேசப்போகிறேன். கார்த்திகை, மார்கழி மாதங்கள் பல வழிகளிலும் பல நிலைகளிலும் பல முக்கிய விடயங்களை உள்ளடக்கிய மாதங்களாகும்.

கார்த்திகையின் முதலாம் நாள் சகல புனிதர்களின் தினமாகக் கொண்டாடுகிறோம். அதே போன்று இரண்டாம் திகதி சகல ஆன்மாக்களின் தினத்தை நினைவு கூறுகின்றோம். இத்தினத்திலே ஒவ்வொரு வீடும் தங்களின் இழந்த உறவுகளை நினைவு கூர்வார்கள்.

மேலும் இம்மாதம் ஆறாம் திகதி மறைமாவட்டத்திலே பணிபுரிந்து மறைந்துபோன ஆயர்கள், குருக்கள், அருட்சகோதர, சகோதரிகளை நினைவுகூர்ந்து சிறப்புத் திருப்பலி ஆயர் தலைமையில் குருக்களும் இணைந்து திருப்பலியை நிறைவேற்றுவார்கள்.

இம்மாதத்திலே மரியாளை காணிக்கையாக ஒப்புக்கொடுத்த நாளையும் கொண்டாடுகின்றோம். இம்மாதம் 26ம் திகதி 'கிறீஸ்து அரசர்' பெருவிழாவாகும். இவ்விழாவினை கணேசபுர இறைமக்கள், கடற்படை ஆலய இறைமக்கள், கன்னியா ஆலய இறைமக்கள் விழாவினைக் கொண்டாடுகின்றார்கள். அனைவருக்கும் கிறீஸ்து அரசரின் ஆசிருடன் கூடிய நல்வாழ்த்துக்கள்.

மேலும் இம்மாதத்திலே அருட்பணி I.ஜீட் சர்வானந்தன் தனது குருத்துவ நாளை நினைவுகூர மார்கழி இருபதில் அருட்பணி S. டக்ளஸ் ஜேம்ஸ் தனது குருத்துவ நாளை நினைவு கூர்ந்து இறைவனுக்கு நன்றி கூறுகின்றார்கள். தொடர்ந்தும் இவர்களின் பணிவாழ்வு இறை ஆசிருடன் தொடர இவர்களுக்காக இறைவனை வேண்டுவோம்.

மார்கழி எட்டிலே அமலமரித்தியாகிகள் சபையினர் தமது விழாவினைக் கொண்டாட மார்கழி 31ல் திருக்குடும்ப சபையினர் தமது விழாவைக் கொண்டாடுகின்றார்கள். தொடர்ந்தும் உங்கள் பணிவாழ்வு சிறப்படைய எங்கள் வாழ்த்துக்கள்.

மேலும் இருமாதங்களிலும் நமக்காகப் பணிபுரிந்து மறைந்துபோன அருட்பணி ஜே. இராசையா, நோபட் ஒக்கஸ், கொட்பிறி கிளரி யே.ச, ஜோசப் டிக்கோணி, ஹென்றிப் பொன்னையா, ஆயர். L.R. அன்ரனி இவர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காக இறைவனை வேண்டுவோம்.

மார்கழி 25 கிறீஸ்துவின் பிறப்பு. எல்லோரின் எதிர்பார்ப்புக்களும் கிறீஸ்துவின் பிறப்பை மையப்படுத்தியே நகர்கின்றன. எங்கள் உள்ளங்கள் இறைமகனார் இயேசுவிற்கு ஏற்புடைய இல்லங்களாக மாறி அவர் நம்மிலே குடிகொள்ளும் அளவிற்கு நம்மை நாம் உருமாற்றி இறைமகனின் வரவினால் நிறைவடைவோம். அனைவருக்கும் எங்கள் நத்தார் நல்வாழ்த்துக்கள்.

மார்கழி மூன்றிலே தேசிய விவிலிய ஞாயிறு கொண்டாடப்படுகின்றது. மறை அறிவை வளர்ப்போம். நலன்களைக் கண்டடைய எமது வாழ்த்துக்கள். 31ல் திருக்குடும்ப விழாவைக் கொண்டாடுகின்றோம். உண்மையில் ஒவ்வொரு குடும்பங்களும் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். எமக்கு வழிகாட்டிகளாக இருந்த திருக்குடும்பத்தை நினைவிற்கொண்டு எங்கள் குடும்பங்களும் அந்த உயர்வின் நிலைகளைக் கண்டடைய முயல்வோம்.

மேலும் அரசியல் நிலைகளை நோக்கும் போது ஆட்சிக்கு எதிராகப் பலதரப்பட்ட கோஷங்கள். மக்கள் ஏற்றுக் கொண்ட ஆட்சியைக் கலைத்தழிப்பதற்கு மேற்கொள்ளப்படுகின்ற செயலமர்வுகள் அனைத்துமே வன்முறைகளின் பிரதிபலிப்பாகவே தோன்றுகின்றது. மக்களை முதன்மைப்படுத்தி முடிவுகளை எடுக்கவேண்டும். எது எதுவாக இருந்தாலும் மக்களைப் புறந்தள்ளக்கூடாது. எங்கும் எதிலும் நல்லது நிகழ வேண்டுவோம்.

வருடத்தை முடிப்பதற்கு நகரும் இவ்வேளையிலே அனைத்தும், அனைத்திலுமே நல்லவையே தோன்ற வேண்டுமெனக் கூறி புதுவருட நல்வாழ்த்துக்களையும் கூறுகின்றேன்.

## குட்டிக்கதை

Fr .Nc

ஒரு கிராமத்தில் இரு நண்பர்கள். நட்பு என்றால் அதைச் சொல்லவே முடியாது. அந்த அளவிற்கு உயர்ந்து நின்றது. இருவரில் ஒருவருக்கு ஏதும் மகிழ்ச்சியான சம்பவமென்றால் அதில் மற்றவர் நிறைவாகக் கலந்து கொள்வார். அல்லது இவர்களில் ஒருவருக்கு ஏதும் துன்ப நிகழ்வு என்றால் அத்துன்பத்தை தனது துன்பமாக மற்றவர் உணர்ந்து செயலிலே காட்டுவார். அவர்களது நட்பைக் குறித்து எல்லோருக்கும் ஆச்சரியம். 'அன்பும் நட்பும் எங்குள்ளதோ அங்கே இறைவன் இருக்கின்றார்' என்பது அவர்களின் வாழ்விலே உண்மையாய் தெரிகின்றதல்லவா?



1ம் பக்கத் தொடர்ச்சி....... ஆயரின் செய்தி

நவம்பர் மாதம் 18ம் திகதி இரண்டு முக்கிய விடயங்கள் எமது மறைமாவட்டத்தில் நடந்தேறின. முதலாவது யூபிலி மண்டபத் திறப்பு விழா. 1983 முதல் பயன்படுத்தப்படாமல் இருந்த சிங்கள கலவன் பாடசாலை பல வருட போராட்டங்களின் பின்பு 2014 டிசம்பர் மாதம் மீண்டும் மறைமாவட்டத்தின் நிர்வாகத்தின் கீழ் வந்தது. இக்காணியில் இருந்த கட்டடங்கள் திருத்தப்பட்டு அதில் அமைந்துள்ள மண்டபம் புனரமைக்கப்பட்டு 18ம் திகதி முறையாகத் திறந்து வைக்கப்பட்டது. இம்மண்டபம் கல்வி வளர்ச்சிகளுக்கும் கலாச்சார நிகழ்ச்சிகளுக்கும் பயன்படுத்தப்படும். யூபிலி மண்டபம் திறந்து வைக்கப்பட்டு முதலாவது நிகழ்வாக 2017ம் ஆண்டிற்கான மறைமாவட்ட மேய்ப்புப்பணிச் சபையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

டிசம்பர் மாதம் என்றாலே மகிழ்ச்சி, பகிர்தல், ஆன்மீகம் நினைவுக்கு வரும். பாடசாலைகள். நிறுவனங்கள், பங்குகள் மட்டத்தில் ஒளிவிழா கொண்டாட்டங்களும் நடைபெறும். இவற்றின் உச்சமாக இவ்வருடம் எமது மறைமாவட்டத்திலே தேசிய கிறிஸ்மஸ் விழா நடைபெறும். டிசம்பர் 16ம் திகதி சனிக்கிழமை நடைபெறும் இந்நிகழ்வுக்கு இலங்கை ஜனாதிபதி முதன்மை அதிதியாகக் கலந்து கொள்வார்.

டிசம்பர் 25ம் திகதி கிறிஸ்து பிறப்புப் பெருவிழாவை உலகமே கொண்டாடினாலும் கிறிஸ்தவர் எமக்கு ஆன்மீகம் நிறைந்த விழாவாகும். இறைவன் உலகை மீட்க மனிதனான பெருவிழா. தனது அன்பை முழுமையாக வெளிப்படுத்த எடுத்த முயற்சியின் மிக முக்கிய நிலையிது. குழந்தை இயேசுவின் பிறப்பும் அதையொட்டிய நிகழ்ச்சிகளும், மனிதர்களும்தொடர்ச்சியாக எமக்குப் பல செய்திகளைத் தருகின்றார்.

"உன்னதத்தில் கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக!
உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக!"

எனும் வானதூதரின் செய்தி சிறப்பானது. செய்தி தமது மந்தைக்கு காவல் காத்த இடையருக்குக் கொடுக்கப்பட்டது. அது அமைதியைக் கொண்டுவரும் செய்தியாகும். தமது பதவி, செல்வம். அந்தஸ்து என்றிருந்த சமயத் தலைவர்களுக்கும் ஏரோது மன்னனுக்கும் செய்தி கொடுக்கப்படவில்லை. மரியாவைப்போல எம்மை நாம் தாழ்த்தும்போதே இதுபோன்ற ஆன்மீக அனுபவத்தை நாமும் பெறலாம்.

மீண்டும் ஓர் வருடம் முடிகின்றது. இவ்வாண்டு மூன்று தலைப்புகளை மையமாகக் கொண்டு பல விடயங்களை நிகழ்த்தினோம். தூயயோசேவ் வாஸ் ஆண்டு, மத்தேயு நற்செய்தி ஆண்டு, குடும்ப நற்பணிகள் ஆண்டு எனும் மூன்று தலைப்புகளில் உரைகள் கருத்தரங்குகள், கண்காட்சி என பல நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.

மேலும் எதிர்வரும் வருடத்திற்கான தலைப்புகளையும் அறிவித்துள்ளோம்.

1. சிறிய கிறிஸ்தவ குழுமங்களின் ஆண்டு
2. மாற்கு நற்செய்தி ஆண்டு.
3. ஞானப் பெற்றோர் ஆண்டு.

இத்தலைப்புகளின் பின்னணியில் அடுத்த வருடத்திலும் பல நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்படுகின்றன. எல்வேளையும் எமது பங்களிப்பையும் ஒத்துழைப்பையும் வழங்கி பயனடைவோம்.

இக்காலம் உங்கள் ஒவ்வொருவருக்கும் மகிழ்ச்சியையும், அமைதியையும் பகிர்வையும் கொண்டு வர வாழ்த்துகின்றேன்!.

கிறிஸ்துவில்,

பேரருட்திரு கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல்
திருகோணமலை மறைமாவட்ட ஆயர்

# மீண்டும் குவாடலூப்பே அன்னையின் நினைவலைகள்

மெக்ஸிக்கோ மாநகரின் மாதரசியாம் தூய குவாடலூப்பே அன்னை திருகோணமலை சின்னக்கடைப் பங்கின் நீலக்கடலோரத்தில் மூன்று சந்திதிகளின் இணைப்பில் கோயில் கொண்டு எமது பங்கின் பாதுகாவலியாக பங்கை அலங்கரித்துக் கொண்டிருக்கிறாள். கி.பி. 1531ம் ஆண்டு மார்கழித்திங்கள் 9ம் நாள் சனிக்கிழமை அதிகாலை திருப்பலி காணச் சென்ற யுவான் தியேகோவிற்கு அன்னை காட்சி கொடுத்தாள். அதே மார்கழித்திங்கள் 9ம் நாள் சனிக்கிழமையாகிய இன்று குவாடலூப்பே அன்னை காட்சி கொடுத்த அந்நிகழ்வை நினைவில் கொண்டு அன்னையை வாழ்த்துவோம். மகிமைப்படுத்துவோம்.

1531ம் ஆண்டு மார்கழித் திங்கள் 09ம் நாள் சனிக்கிழமை, அதிகாலைப்பொழுது, பனி கொட்டும் வேளை பல மைல்களுக்கு அப்பால் அமைந்துள்ள ஆலயத்தில் திருப்பலி காண விரைந்து செல்லும் தனது பக்தனான யுவான் தியேகோவை அன்னைமரியாள் பெயர் சொல்லி அழைத்தாள். தன் பெயரை அழைத்த திசையை நோக்கிப் பார்த்த யுவான் ஆச்சரியமடைந்தான். ரெபேயாக் குன்றின் மேல் அழகே உருவான அன்னைமரியாள் குவாடலூப்பே மாதாவாக காட்சி கொடுத்தாள். அச்சத்துடனும் வியப்புடனும் அருகே சென்ற யுவானிடம் இந்த இடத்தில் ஆலயம் அமைக்கும்படி பணித்தாள். யுவான், ஆயர் சுமாரகா ஆண்டகையிடம் அன்னை கூறியதைத் தெரிவித்தார். எவ்வித ஆதாரமுமற்ற இத்தகவலை ஆயர் ஏற்க மறுத்ததுடன் அடையாளம் கொண்டு வரும்படி கூறி அனுப்பினார்.

யுவானுக்கு மீண்டும் அன்னை காட்சி கொடுத்த போது ஆயர் அடையாளம் கேட்பதாகக் கூறினான். அன்னையும் ரோஜா மலர்களைப் பறித்து யுவானின் போர்வையில் அடுக்கி ஆயரிடம் காண்பிக்கும்படி கூறி அனுப்பினாள். யுவான் ஆயரிடம் சென்று அன்னை கொடுத்த அடையாளத்தைக் காண்பிக்கப் போர்வையைத் திறந்த போது பூக்கள் கீழே விழுந்தன. அவனது போர்வையில் அன்னையின் திருவுருவம் பதிந்து காணப்பட்டது. ஆயர் உடனே முழந்தாள்படியிட்டு அன்னையை ஆராதித்து ஆலயம் கட்ட ஆரம்பித்தார். இன்றும் மெக்ஸிக்கோவில் குவாடலூப்பே அன்னையின் ஆலயம் மிகவும் பிரசித்தி பெற்ற ஆலயமாகத் திகழ்கின்றது. 472 வருடங்களாக வருடத்துக்கு இரண்டு கோடி மக்களால் ஆலயம் தரிசிக்கப்படுவதுடன் பல புதுமைகளும் தினமும் நடைபெற்று வருகின்றது. மெக்ஸிக்கோ அன்னை குவாடலூப்பே மரியாள் பேராலயம் வத்திக்கானுக்கு அடுத்ததாக அதிக மக்கள் தரிசிக்கும் இரண்டாவது பேராலயமாக உலகில் விளங்குகின்றது. திருத்தந்தை 2ம் அருளப்பர் சின்னப்பர் 2002ம் ஆண்டு யூலை மாதம் 30ம் திகதி யுவான் தியேகுவைப் புனிதராகப் பிரகடனப்படுத்தினார். எமது பங்கின் பாதுகாவலியாம் தூய குவாடலூப்பே அன்னை ஆலயம் 1956ம் ஆண்டு அருட்பணி ஜோன் பீற்றர் அடிகளாரால் கருங்கற்களினால் அழகான ஆலயம் அமைக்கப்பட்டது. மெக்ஸிக்கோ நாட்டவரான ஆயர் இக்னேசியஸ் க்ளெணி ஆண்டகை மெக்ஸிக்கோவில் இருந்து அன்னையின் திருவுருவப்படத்தை தருவித்து தந்தமையும் குறிப்பிடத்தக்கது. எமது பங்கில் தொடர்ந்தும் வழிபாடுகள் சிறப்பாக நடைபெறுவதுடன் நாளாந்தம் பல இன மக்களும், வெளிநாட்டவர்களும், அன்னையைத் தரிசித்து ஆராதித்து அற்புதங்களையும் பெற்றுச் செல்வது சிறப்பம்சமாகும்.

"நித்திய பரிசுத்த கன்னிகையே
[illegible] அன்னையே! வாழ்க வாழ்க!

K. ஜசிந்தா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர் - 09

# நல்லாசிரியர்: ஆளுமையும் ஆன்மீகமும்



## நடுநிலைமை (சமத்துவம், பேதமின்மை)

அருட்தந்தை எஸ். அன்ரனி பொன்சியன் அமதி (BTh,B.A. (Hons), PGDE, MEd)

பாரபட்சமாய் இருத்தல் வளமையாக சமூகத்தில் நாம் காணுகின்ற ஓர் அம்சமாகும். ஒருவர் தனது குடும்பத்திற்கு, தனது குழுவிற்கு சாதிக்கு, இனத்திற்கு ஒரே மொழி பேசுவோருக்கு ஆதரவு, சலுகை காட்டுவது இயல்பானதாகும். அழகு, திறமை, பணம் போன்றவற்றில் ஒருவருக்கு ஈடுபாடு அல்லது கவர்ச்சி ஏற்படுவது இயல்பாக காணக்கூடிய தொன்றாகும். எப்போதும் நடு~ நிலைமை தவறாத ஒருவர் என்றால் அது இறைவனாகத்தான் இருக்க முடியும். எல்லோரும் அவருடைய இதயத்திற்கு நெருக்கமான பிள்ளைகள் என்றபடியால் எல்லோரையும் ஒரேமாதி~ ரியாக இறைவன் பார்க்கின்றார், அன்பு செய்கின்றார்.

துறவறத்தார், குருக்கள், தாதியர்கள், ஆசிரியர் கட்டாயமாக நடுநிலைமை உடையவராக இருத்தல் அவசியம். மேற்குறிப்பிட்டவர்கள் பலதரப்பட்டவர்களோடு நேரடியாகத் தொடர்பு வைத்திருப்பவர்கள். அவர்களுக்கு சேவையாற்றுவதற்காகவே நியமிக்கப்பட்டவர்கள். இதற்காகவே ஊதியம் வழங்கப்படுகின்றது. ஆகவே எல்லோருடனும் சமமாகப் பழகுவதும், சமபணி செய்வதும் கட்டாய கடமையாகும். ஏனெனில் கடவுள் முன்னிலையில் எல்லோரும் சமமானவர்கள், எல்லோரிலும் கடவுள் பிரசன்னமாய் இருக்கின்றார்.

நடுநிலைமை பேணல் ஆசிரியர் ஒருவருக்கு மிக முக்கியமானதும் அதே வேளை மிகக் கடினமா~ னதுமாகும். ஒவ்வொரு நாளும் பாடசாலையில் ஏறக்குறைய 100 – 150 மாணவர்களுக்கு முகங்கொடுக்க வேண்டியவராக இருக்கும். அவர்களில் ஒவ்வொருவரும் மற்றவர்களில் இருந்து வேறுபட்டவர்கள். ஒவ்வொரு மாணவனும் ஏதோ ஒரு விதத்தில் தனித்துவம் உடையவன். ஆசிரி~ யர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு மாணவர் மேலும் செல்வாக்குச் செலுத்துபவராக இருக்கின்றார். ஒவ்வொரு மாணவனும் ஆசிரியரை எவ்வாறு கணிப்பிடுகின்றான் ஏற்றுக்கொள்கின்றான் என்பதைப் பொறுத்து இது வேறுபடலாம். இருந்தும் மாணவரில் ஆசிரியர் எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றார் என்பதில் பெரும்பங்கு ஆசிரியரிலேயே தங்கியுள்ளது. கற்றல் கற்பித்தல் என்ற முக்கிய பணியில் தான் இறைவனின் விசேட உதவியாளர் எனவும், ஒவ்வொரு மாணவரிலும் இறைவன் பிரசன்னமாய் இருக்கின்றார் என உணர்ந்தாரெனில் எந்தளவுக்கு முடியுமோ அந்தளவுக்கு ஒவ்வொரு பிள்ளையையும் அன்பு செய்பவராகவும், பராமரிப்பவராகவும் விளங்குவர்.

மாணவரோ அல்லது மாணவரின் பெற்றோரோ ஆசிரியரின் மனதைப் புண்படுத்தும்போதோ அல்லது தீங்கு வினை
ளவிக்கும்போதோ நடுநிலைமை பேணுவது மிகக் கடினமான காரியமாகின்றது. ஒழுக்கம் சார்ந்த செயற்பாட்டிற்காகவோ அல்லது மாணவன் மேலுள்ள அக்கறை காரணமாகவோ தண்டிக்கின்ற போது எல்லா மாணவர்களும் ஆசிரியரைப் புரிந்து கொள்வார்கள் என்பதில்லை. தங்கள் பிழையை மறைத்து ஆசிரியர் பற்றி பிழையான குற்றச்சாட்டுக்களை பெற்றோருக்கு கூறி ஆசிரியர்களுக்கு எதிராக பெற்றோரைத் தூண்டிவிடும் பல சந்தர்ப்பங்களும் உண்டு. பிள்ளைகள் கூறுவதை மட்டும் நம்பி ஆசிரியரை நேரடியா~ கப் புண்படுத்தும் போது அல்லது பிழையான குற்றச்சாட்டுக்களை கூறுகின்ற பொழுது மனவேதனைப்பட்டு கண்ணீர்விடுகின்ற பல ஆசிரியர்களை அனுபவத்தில் கண்டிருக்கின்றோம். இவ்வாறான சூழ்நிலையில் ஆசிரியர் எவ்வாறு நடந்துகொள்வார். மாணவரை ஏதோ வகையில் பழிவாங்குவார் அல்லது மாணவரின் விடயத்தில் பாராமு~ கமாய் இருந்துகொள்வார். ஆனால் நல்லாசிரியர் ஒருவர் இவ்வுணர்வுகளுக்கு அப்பால் சென்று மாணவரை ஏற்றுக்கொண்டு அவர்களை ஒரே மாதிரி நடுநிலைமை தவறாமல் நடத்துவார்.

சலுகைகள் கிடைக்கின்ற போது ஆசிரியர்களுக்கு சிறுசோதனை ஏற்படுவதுண்டு. ஆசிரியர்களுக்கும் கையூட்டு (இலஞ்சம்) பல வடிவங்களில் கிடைக்கலாம். மாணவர்களிடம் இருந்தோ அல்லது பெற்றோரிடம் இருந்தோ பரிசாகவோ, பாராட்டாகவோ கிடைக்கலாம். இவ்வேளைகளில் சில மாணவர்களுக்கு சார்பாக ஆசி~ ரியர் நடந்துகொள்வது இயல்பாக இருக்கக்கூடும். நல்ல ஆசிரியர் இவ்வாறான சூழ்நிலையால் ஏற்படும் தீங்குகளை முன் உணர்ந்து விலகிக்கொள்வார். சில மாண~ வரிலே இயல்பாகவே ஆசிரியருக்கு ஈர்ப்பு ஏற்படுவதுண்டு. அதே வேளை சில மாணவர்களுக்கு ஆசிரியரில் பிரத்தியேக பாசம், மரியாதை ஏற்படுவதுண்டு. இம்மாணவருக்கு ஆசிரியர் தன்னையறியா
மலே நேசம், பரிவு காட்டலாம். நல்லாசிரியர் இவ்விடயங்களிலேயும் மிக அவதானமாய் இருப்பார். எவ்வித பேதங்களும் தனிப்பட்ட அழுத்தங்களும் இன்றி ஆசிரியர் செயலாற்ற வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டாலும் சில மாணவரைப் பொறுத்தவரை ஆசிரியரது பிரத்தியேக கரிசனையும், பராமரிப்பும் இயல்பாகவே இருக்கக்கூடும். சிறப்புத் தேவையுடைய விசேட கல்வியில் உள்வாங்கப்பட்ட மனநலம் உடல்நலம் குன்றிய மாணவருக்கும், பொருளாதாரத்தில் கீழ்நிலையில் உள்வர்களுக்கும், ஒழுக்கத்தில் முன்னேற வேண்டியவர்களுக்கும் ஆசிரியர் விசேட கவனம் செலுத்த கடமைப்பட்டிருக்கின்றார்.

தொடரும்..................

---

தவறுக்கு வருந்துகின்றோம் .

## தேசிய விவிலியப் போட்டி முடிவுகள் 2017



### விவிலிய பேச்சுப்போட்டி

**தமிழ் மொழி**

கீழ்ப்பிரிவு ~ 3ம் இடம் செல்வி சுமேந்திரா வேணுஜா, அலஸ்தோட்டப் பங்கு
மேல்பிரிவு ~ 1ம் இடம் செல்வி சிறில்சுந்தராஜா ஹம்சாலினி

**சிங்களமொழி**

கீழ்பிரிவு ~ 1ம் இடம் செல்வன் யொஹான் ஏனஸ்ற் கீத், சீனன்குடா(ஆண்டாங்குளம்)

**ஆங்கில மொழி**

கீழ்பிரிவு ~ 1ம் இடம் செல்வி இருதயராசா பிரவீனா, உவர்மலைப் பங்கு
மேல்பிரிவு ~ 1ம் இடம் செல்வி நேசராஜா லக்ஷிக்கா கொனஸ்ரி, குவாடலூப்பே பங்கு

### விவிலிய அறிவுப்போட்டி

**தமிழ் மொழி**

கீழ்ப்பிரிவு ~ 3ம் இடம் பாலையூற்று (அன்புவழிபுரம்) பங்கு பெறுகிறார்கள்
மேல்பிரிவு ~ 1ம் இடம் பாலையூற்று (அன்புவழிபுரம்) பங்கு பெறுகிறார்கள்

**மொத்தமாக 05 முதலாம் இடங்களையும், 02 மூன்றாம் இடங்களையும் எமது மறைமாவட்டம் பெற்றுக் கொண்டுள்ளது.**

# அறிவித்தல்

உங்கள் அன்புக்குரியவர்களின் பிறந்தநாள், திருமணநாள், இறந்த நாள் ஆகியவற்றை பிரசுரிக்க வேண்டியவர்கள் எந்த மாதத்தில் பிரசுரிக்க வேண்டுமோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 10ம் திகதிக்கு முன்னர் அனைத்து விபரங்களையும் தெளிவாக எழுதி எம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதை அன்போடு நினைவுபடுத்துகின்றோம்

### கட்டண விபரம்

| | | |
|---|---|---|
| கறுப்பு வெள்ளை | 1/4 பக்கம் ~ 2500.00 ரூபா | |
| | 1/2 பக்கம் ~ 5000.00 ரூபா | |
| கலர் | 1/4 பக்கம் ~ 3750.00 ரூபா | |
| | 1/2 பக்கம் ~ 7500.00 ரூபா | |

# அஞ்சல் வழி டிப்ளோமா கற்கைநெறி

### "உம் வார்த்தை எம் விளக்கு"

கிளரீசிய சபையினரால் நடாத்தப்படும் அஞ்சல்வழி விவிலியப் பாடநெறியானது மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதை மிகவும் மகிழ்வுடன் அறியத்தருகின்றோம். இறைவார்த்தையின் ஆழத்தையும் பொருளையும் எம் இறைமக்களும் குறிப்பாக பங்கு மறையாசிரியரும் திருவிவிலியத்தைப் பற்றி அறிந்து பயன் பெற்று அதை மாணவர்களுக்கு கற்று கொடுத்து நாளைய எம் சமூகம் இறைவார்த்தையில் தழைக்க இப்பாடநெறியை மறை~ யாசிரியர் மத்தியில் நடாத்த ஆவல் கொண்டுள்ளோம்.

இப் பாடநெறியானது டிப்ளோமா கற்கை நெறியாக உள்ளதுடன் இதற்கான புத்தகங்கள் அனைத்தும் முற்றிலும் இலவசமாக எம்மால் வழங்கப்படும். அத்துடன் இவர்களுக்கு நாம் அனுப்பும் தபால் செலவாக 1400 ரூபா மட்டுமே, இவர்களின் இக்கல்விக்கான கட்டணமாக செலவிடப்படுகின்றது. அதிலும் பயனாளிகள் ஒரு பகுதியாக 700 ரூபாவை மாத்திரம் செலுத்த வேண்டும். இதை இரண்டு தவணையாக செலுத்தலாம்.

இறைமக்கள் மத்தியில் இறைவார்த்தையை அறியச் செய்யும் இப்பணி மூலம் உங்களின் பங்குச் சமூகமும் எம் கத்தோலிக்கத் திருச்சபையின் குழந்தைகளும், எதிர்கால சந்ததியினரும் பயன் பெறுவர் என்பதில் யாதொரு ஐயமுமில்லை!

**தொடர்புகளுக்கு,**



முகவரி : அருட்பணி அந்தோனி பெர்னான்டோ
இயக்குனர்,
அஞ்சல்வழி டிப்ளோமா கற்கைநெறி
இல -15, கொழும்புத்துறை வீதி,
சுண்டிக்குழி,
யாழ்ப்பாணம்.

Address : Rev. Fr. Antony Fernando CMF
The Director
Biblical Apostolate
No: 15, Columputhurai Road
Chundikuli
Jaffna.

தொலைபேசி இலக்கம் : 0711915554 / 076791554 / 0758915554

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பத்தில் பொறுப்புணர்வு

## பிள்ளைகள் மற்றும் திருமணத்தின் மட்டில் நெறிமுறைகளின் பூரணத்துவம்

சென்ற இதழ் தொடர்ச்சி...

அருட். சகோ . எமர்சன் றாகல்
மெய்யியல் பீடம்,
தேசிய குருமடம்

எனவே இவ்வகைக் கற்றல் நடவடிக்கைகளில் பிள்ளைகளின் நல்வாழ்வை மேம்படுத்த சிறிய தண்டணைகள் வழங்குவதும் அவசியமாகும். ஆனால் தண்டணைகள் வீட்டு வன்முறையாக மாறக் கூடாது. ஆகவே நேர்மறையான நோக்கம் பிள்ளைகளின் நல்வாழ்வு திருமணத்தின் பிணைப்பில் தங்கியுள்ளது. இவற்றின் பின்னணியில் நாம் குடும்பம் ஒன்றை நோக்குகையில் திருமணம் பற்றிய முன்னோக்கும், குழந்தைகளுக்கான நல்வாழ்வு பற்றிய சிந்தனையும் இரண்டரக் கலந்துள்ளது. ஒன்றிலிருந்து இன்னொன்றைப் பிரித்துக் காட்ட முடியாத நிலையில் இன்றைய குடும்பங்களில் பெற்றோர்கள், குழந்தைகளின் பொறுப்புணர்வு காணப்பட வேண்டும்.

**02. குழந்தைகளுக்கு எதிரான வீட்டு வன்முறை, குழந்தை புறக்கணிப்பு மற்றும் துஷ்பிரயோகம்**

திருமணம் எனும் அருட்சாதனத்தின் முதல் நோக்கம் அன்பு. அந்த அன்பின் கனியாகத் தோன்றும் மக்கள் செல்வத்தை (குழந்தைகள்) கிறிஸ்தவச் சூழலில் வளர்ப்பதும், கல்வி புகட்டுவதும், ஆளாக்குவதும் பிற நோக்கங்களாகும். இன்றைய சமுதாய நிலையில் குடும்பங்களின் இருண்ட பகுதியாக வீட்டு வன்முறைகள் இவ் நோக்கங்களின் தோல்வியால் ஏற்படுகின்றது. அதாவது தூய பவுல், 'நான் மானிடரின் மொழிகளிலும் வானதூதரின் மொழிகளிலும் பேசினாலும் அன்பு என்க்கில்லையேல் ஒலிக்கும் வெண்கலமும் ஓசையிடும் தாளமும் போலாவேன்' என்று கூறுவதைப் போல அன்பு இல்லாத குடும்பங்களில் இவ்வாறான வன்முறைகளின் தாக்கம் அதிகமாகவே காணப்படும். வீட்டு வன்முறைகள் மற்றும் திருமண உடன்படிக்கைப் பற்றி கலந்துரையாடும் போது இருவகையான எண்ணக்கருக்கள் எழுகின்றன.

I. திருமண உடன்படிக்கையை கருத்தில் கொண்டு வீட்டு வன்முறைகளை சிலவேளைகளில் கவனத்தில் கொள்வது இல்லை. அதாவது திருமண உடன்படிக்கையை நிலைநாட்ட அதிக கவனம் செலுத்தவதும், குழந்தைகளுக்கு ஏற்படுகின்ற மன அழுத்தம், கொடுமைகள், புறக்கணிப்புக்கள், உடல் மற்றும் உளத் துஷ்பிரயோகங்களை கவனத்தில் கொள்ளாமையும் ஆகும்.

II. திருமணப்பிணைப்பைப் பாதுகாக்க வீட்டு வன்முறைகளை இரகசியங்களாக வைத்திருத்தல். ஏனெனில், 'தியாகம்' செய்தல் எனும் மனநிலையை குடும்ப அங்கத்தவர்களுக்கு மனதில் திணிக்கப்பட்டு மனிதனின் அடிப்படை உரிமைகளையும், குழந்தைகளின் உளவியல் ஆரோக்கியத்தையும் புறக்கணித்து விடுகின்றனர். குடும்பத்திற்காக தன்னை தியாகம் செய்ய வேண்டும் என்ற ஒரு கட்டாய நிலையில் குழந்தைகள் உருவாக்கப்படுதல்.

இவை இரண்டையும் பற்றி எண்ணுகையில் நன்மை, தீமை எனும் இரு கண்ணோட்டத்திலும் நோக்கலாம். ஆனால் எல்லா குடும்பங்களிலும் சில பிரச்சினைகள் எழுவதும் அதன்பின் அவை முடிவிற்கு வருவதும் சாதாரணமான விடயம். ஆனால் அவை தீவிரமாக (Extreme) அல்லது கொடிய விதத்தில் குழந்தைகளின் நல்வாழ்வுக்கு எதிராக அமைவதை பற்றி மட்டுமே.

இவை இவ்வாறு இருப்பினும் தனி மனித உரிமைகள் மற்றும் மனிதத்துவத்தை முன்னிறுத்தி டொன் புரௌனிங் (Don Brownin) என்பவர் 'விமர்சனக் குடும்ப வாதம்' (Criitical Familism) எனும் கோட்பாட்டை முன்னிறுத்தினார். அவர் கூறுகையில், குடும்பம் சமூகத்திற்கும் திருச்சபைக்கும் உரிய முக்கியமான அடிப்படை அலகு மட்டுமல்ல மாறாக அது ஒவ்வொரு தனி நபருக்கும் உரியது.......

தொடரும்...........................

# தூய வின்சன் டீ பவுல் சபையினரின் 50 வருட யூபிலி பெருவிழா

திருகோணமலை – பாலையூற்று தூய லூர்து அன்னைத் திருத்தலப் பங்கில் தமது இரக்கச் செயல்களால் வறியவர் வாழ்வு மேம்பட தருமப்பணி ஆற்றி வருகின்ற தூய வின்சன் டீ பவுல் சபையினர் தமது பணிவாழ்வின் 50 வருட நிறைவை கடந்த 15.10.2017 அன்று யூபிலி பெருவிழாவாகக் கொண்டாடி மகிழ்வுற்றனர்.

அன்றைய தினம் காலை 7.00 மணியளவில் சம்பிரதாயபூர்வ வரவேற்பு பவனியைத் தொடர்ந்து திருநிலையினராகிய அருட்தந்தை ரீ. கிங்ஸ்லி றொபட், அருட்தந்தை யூ. போல் ஜெனத்தன், அருட்பணி எஸ். மதுராங்கன் குரூஸ் ஆகிய அருட்தந்தையர்கள் புடைசூழ எமது மறைமாநிலத் தந்தை மேதகு ஆயர் கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகையின் தலைமையில் கூட்டுத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.

நன்றியின் வெளிப்படுத்தலாக நிறைவேற்றப்பட்ட இந்த யூபிலித் திருப்பலியில் பங்குச் சமூகத்துடன் திருகோணமலை மறைமாவட்டத்தின் வின்சென்சியன்கள் பலர் இதில் கலந்து கொண்டிருந்தனர்.

இப்பொன்விழா நிகழ்வின் இறுதியில் இடம்பெற்ற சிறப்பு மலர் வெளியீடு, அலை ஓசைக் கலைத் தொடர்பகம் நடாத்திய கிராமிய நடனப் போட்டியின் வெற்றியாளர்க்கான நற்சான்றிதழ் மற்றும் ஆசிரியர் தினத்தையொட்டி பங்கு மறையாசிரியர்களுக்கு நினைவுப் பரிசில் வழங்கி கௌரவிக்கப்பட்ட நிகழ்வுகளும் இவ்விழாவிற்கு மேலும் சிறப்பூட்டியது.

**தகவல் : G. அல்பேட், SSVP – பாலையூற்று**

~ புகைப்படம் 12ம் பக்கத்தில்...........

# கும்புறுப்பிட்டி தூய சவேரியார் ஆலயத்தில் திருவிவிலியக் கண்காட்சி

கடந்த 29.10.2017 அன்று தூய சவேரியார் ஆலயத்தில் மறையாசிரியர்கள், மறைக்கல்வி மாணவர்கள், பங்கு மக்கள் அனைவரும் இணைந்து திருவிவிலியக் கண்காட்சியானது திறம்பட செயல்வடிவம் பெற உறுதுணையாகவும் பக்கபலமாகவும் இருந்த வழிநடத்தியவர் அருட்சகோதரி F. தாரணி (SCJM) அவர்கள். இவரின் பாரிய உழைப்பு மிகவும் வரவேற்கத்தக்கது. இக்கண்காட்சியில் மாணவர்களது அறிவு, திறன், மனப்பாங்கு போன்ற உயர்ந்த மாற்றங்கள் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நிகழ்விற்கு திருகோணமலை மறைமாவட்டத்தின் மறைக்கல்வி நடுநிலைய இயக்குனர் அருட்தந்தை N.C. அருள்வரதன் பிரதம விருந்தினராகவும் அவரோடு இணைந்து திருமதி S. அஜந்தா, செல்வி R. லதா ஆகியோர் கண்காட்சியைப் பார்வையிட்டு புள்ளிகள் வழங்கப்பட்டு பரிசில்களும் அறிவிக்கப்பட்டன.

இக்கண்காட்சியை அயலிலுள்ள மக்களும், அயல்பாடசாலைகளும் கண்டு களித்துச் சென்றனர். அதுமட்டுமல்லாமல், இக்கண்காட்சியானது ஒருவாரம் வரை நீடித்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இக்கண்காட்சியை நடாத்துவதற்கு ஊக்கமளித்த எமது பங்குத்தந்தை அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்தக் கொள்கின்றோம்.

**தகவல் : பங்குமக்கள்,
தூய சவேரியார் ஆலயம்,
கும்புறுப்பிட்டி**

புகைப்படம் 12ம் பக்கத்தில்......

# மட்டக்களப்பு மறைமாவட்டத்திற்கு புதிய குரு

1ம் பக்கத் தொடர்ச்சி ........

மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் புதிய குருவாக அருட்சகோதரர் அன்ரனி ஜொன்சன் லொயிட் அவர்கள் எதிர்வரும் 16.12.2017 சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு மட்டக்களப்பு, புளியந்தீவு தூய மரியாள் பேராலயத்தில் மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர், பேரருட்தந்தை யோசப் பொன்னையா ஆண்டகையால் திருநிலைப்படுத்தப்படுவார்.

அருட்சகோதரர் ஜொன்சன் லொயிட் திருகோணமலை மறைமாவட்டம், மூதூர் பங்கைச் சேர்ந்த திரு திருமதி அன்ரனி வாசன் மற்றும் வசந்தி அன்ரனி ஆகியோரின் இளைய புதல்வனாவார். இவருக்கு இரண்டு சகோதரர்களும், இரண்டு சகோதரிகளும் உள்ளனர். தனது ஆரம்பக் கல்வியினை மூதூர் தூய அந்தோனியார் மகா வித்தியாலத்தில் கற்று தொடர்ந்து 2004ம் ஆண்டில் 10ம் தரம் கற்கின்றபோது மட்டக்களப்பு தூய ஜோசப் சிறிய குருமடத்தில் இணைந்து தூய மிக்கேல் கல்லூரியில் தனது உயர்தரக் கல்வியினைப் பூர்த்தி செய்துகொண்டார். அவ்வாண்டிலேயே நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக பெற்றோரும், சகோதரர்களும் மட்டக்களப்பில் தங்களது வதிவிடத்தினை மாற்றிக்கொண்டார்கள். அன்று தொடக்கம் இன்று வரையில் குடும்பத்தினர் மட்டக்களப்பிலேயே வசித்து வருகின்றார்கள். 2012ம் ஆண்டில் மறைமாவட்டம் பிரிக்கப்பட்ட பிற்பாடும் தனது பெற்றோரின் வதிவிடம் காரணமாக மட்டக்களப்பு மறைமாவட்டத்திலேயே தன்னை இணைத்துக் கொண்டார்.

2009ம் ஆண்டில் கண்டி தேசிய குருத்துவக் கல்லூரியின் ஆங்கில புகுமுக பரீட்சையில் சித்தியடைந்து ஒருவருட புகுமுக மெய்யியல் பயிற்சியினை களுத்துறையில் பூர்த்தி செய்தார். தொடர்ந்து 2010 – 2012ம் ஆண்டு வரையிலான இரண்டு ஆண்டுகள் யாழ்ப்பாணம், கொழும்புத்துறை தூய பிரான்சீஸ் சவேரியார் குருமடத்தில் மெய்யியல் கற்கை நெறியினை நிறைவு செய்தார். தொடர்ந்துவந்த ஓராண்டு காலத்தில் தனது இடைக்காலப் பயிற்சியினை மட்டக்களப்பு சிறிய குருமடத்திலும், அளிகம்பை, தேவகிராமம் தூய பிரான்சீஸ் சவேரியார் பங்கிலும் பெற்றுக்கொண்டார்.
இறையியல் கற்கனையினை தொடரும் வண்ணம் 2013 – 2017 வரையிலான நான்காண்டு காலப்பகுதியில் கண்டி, அம்பிட்டிய இலங்கை மாதா தேசிய குருத்துவக் கல்லூரியில் இணைந்து பயிற்சிகளைப் பெற்றுக்கொண்டார். தனது இறையியல் கற்கையினை பூர்த்திசெய்துகொண்ட அருட்சகோதரர் லொயிட் அவர்கள் கடந்த 19.08.2017 அன்று பேரருட்தந்தை யோசப் பொன்னையா ஆண்டகையால் திருத்தொண்டராக மட்டக்களப்பு, தாண்டவன்வெளி தூய காணிக்கை அன்னை ஆலயத்தில் திருநிலைப்படுத்தப்பட்டார். தனது குருத்துவ திருநிலைப்படுத்தலுக்கு முன்னதான திருத்தொண்டர் களப்பயிற்சியினை மட்டக்களப்பு, இருதயபுரம் திருஇருதயநாதர் ஆலயப் பங்கில் தற்போது பெற்று வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் தனது முதல் நன்றித் திருப்பலியினை மட்டக்களப்பு, புளியந்தீவு தூய மரியாள் பேராலயத்தில் எதிர்வரும் 17.12.2017 ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணிக்கு ஒப்புக்கொடுப்பார். இவர் மூதூர் பங்கிலிருந்து குருத்துவ நிலைக்கு உயர்த்தப்படும் எட்டாவது குருவாவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவரது குருத்துவ திருநிலைப்படுத்தலும், குருத்துவ அருட்பொழிவு வாழ்வு சிறக்கவும் அருட்சகோதரரை வாழ்த்திச் செபிப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அன்பின் மகிழ்வு

அருட்தந்தை. ஏ.ஏ. நவரெட்ணம்
விரிவுரையாளர்,
கிழக்குப் பல்கலைக்கழகம்

## திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் திருத்தூது ஊக்கவுரை

## அலகு – 1 – இறைவார்த்தையின் ஒளியில் (இலக்கங்கள் 8 – 30)



இல 8: மகிழ்வான ஆரோக்கியமான குடும்பம் என்றால் என்னவென்று திருவிவிலியம் பல்வேறுபட்ட ஆதாரங்களுடன் நமக்குக் கற்பிற்கின்றது.

இல 9: விவிலியப் புத்தகத்தின் முதல் பக்கத்திலேயே கடவுள் ஆணையும், பெண்ணையும் ஒருவர் ஒருவருக்காகப் படைத்தார் என்று காண்கிறோம். அவ்வாறு ஒருவர் ஒருவருக்கான அவர்களின் அன்பானது குடும்பத்தின் அத்திவாரமாகிறது.

இல 10: ஆணும் பெண்ணும் ஒன்றாக இணைந்து உண்டாக்கும் கனியானது (குழந்தைச் செல்வம்) கடவுளின் படைப்பாக்கத்தை படம்பிடித்துக் காட்டுகிறது.

இல 11: ஆணும் பெண்ணும் தங்களது அன்பினால் வெளிக்கொணர்கின்ற உயிரானது (குழந்தை) நிலைத்த ஒன்றிப்பின் அன்பாகிய மூவொரு இறைவனின் இயல்பினை பிரதிபலிக்கின்றது.

இல 12: கணவன் மனைவி உறவாகிய ஆண் பெண் உறவானது கடவுள் தன் மக்கள்மீது காண்பிக்கின்ற அன்பின் அடையாளமாகக் காணப்படுகிறது.

இல 13: திருமண அன்பில் ஆண் பெண் இருவரின் ஒன்றிப்பானது, ஆன்மா மற்றும் உடல் சார்ந்ததாகும்.

இல 14: பிள்ளைகள் எனும் உயிருள்ள கற்களைக் கொண்டு இறைவன் குடும்பம், மற்றும் அதனால் பிறக்கின்ற சமூகங்களை கட்டியெழுப்புகிறார்.

இல 15: ஒவ்வொரு இல்லமும் ஒரு குட்டித் திருச்சபையாக உருவாக்கப்பட வேண்டும். அக்குடும்பத்தில் இறைவன் தினமும் வரவேற்கப்பட வேண்டும்.

இல 16: பெற்றோரே குழந்தைகளின் (பிள்ளைகளின்) முதல் ஆசிரியர்கள். இப்பொறுப்பானது விசுவாச சத்தியங்களை அவர்களுக்கு கற்பிப்பதில் முக்கியத்துவம் பெறுகின்றது.

இல 17: பிள்ளைகளுக்கு கல்வி புகட்டுவது பெற்றோரின் தலையாய கடமையாகும் அவ்வாறே பிள்ளைகளும் பெற்றோருக்கு மதிப்பளிப்பதும் குடும்ப வாழ்விற்கு அடிப்படையாகும்.

இல 18: பிள்ளைகள் பொருட்கள் (உடமைகள்) உல்ல. அவர்கள் வளரும் பருவத்தில் முடிவுகளை மேற்கொள்வதற்கும், தேவையேற்படின் தமது பெற்றோருக்கும் புரிய வைப்பதற்கான சுதந்திரமும் அவர்களுக்கு அளிக்கப்பட வேண்டும்.

இல 19: பாவத்தினால் ஏற்படுகின்ற நோவும், துயரமும் விவிலியத்தில் குறிப்பிடபட்டுள்ள திருமணத்தின், குடும்பத்தின் அம்சமாகும்.

இல 20: எண்ணிலடங்காத குடும்பச் சண்டைகள் (பிணக்குகள்) குறித்த உதாரணங்களை விவிலியத்தில் காணலாம்.

இல 21: ஆணும், பெண்ணும் வாழ்வில் எதிர்கொள்ளக்கூடிய பலதரப்பட்ட துன்பங்கள், பிரச்சனைகள் குறித்து கிறிஸ்து உணர்பூர்வமாக அறிந்திருந்தார் என்பதை நற்செய்திகள் வெளிப்படுத்துகின்றன.

இல 22: திருவிவிலியம் என்பது வெறுமனே சிந்தனைக் கருத்தோட்டம் என்பதல்ல மாறாக அன்பு இறைவனுடன் மேற்கொள்கின்ற தனிப்பட்ட உறவின் சந்திப்பாகும்.

இல 23: தொழில் (உழைப்பு) முழு மனித அனுபவத்தின் அங்கமாகும்.

இல 24: தொழில் குடும்ப மற்றும் சமூக கட்டமைப்பிற்கு இன்றியமையாததாகும்.

இல 25: தொழில் இன்மையே குடும்ப துன்பத்திற்கான காரணியாகும்.

இல 26: தொழிலில் மேற்கொள்ளப்படும் பாவச்செயல்கள் செய்யும் தொழிலை இழிவுபடுத்தி உலகில் பல்வேறுபட்ட அநீதிகளுக்கு இட்டுச்செல்லலாம்

இல 27: அன்பே கடவுள் நம்மோடு உறவுகொள்ள அவரது சித்தமாகும். அதுவே நாம் அவருடனும், அடுத்தவருடனும் உறவுகொள்ள நமது சித்தமாக வேண்டும்.

இல 28: கடவுளின் அன்பு ஆதரவளிக்கும் அன்பாகும். அவ்வன்பே நமக்கு உணவூட்டி, ஆறுதலளிக்கின்றது.

இல 29: குடும்பம் என்பது பெற்றோர் பிள்ளைகளின் அன்பினூடாக கடவுளின் சமூக உறவின் அன்பினை வெளிப்படுத்துவதாக இருக்கவேண்டும்.

இல 30: திருக்குடும்பமானது அதனது நிறைவான அன்பிலும், அதன் துயரங்களிலும், குடும்ப வாழ்வின் மாதிரியாகத் திகழ்கின்றது.

(அலகு இரண்டு அடுத்த இதழில் தொடரும்...)

# தூய யோசேப் வாஸ் ஆண்டு

## தூய யோசேப் வாசின் அடையாளங்களும் புதுமைகளும்



கண்டியில் மழை வருவித்த புதுமை



தூய யோசேப் வாஸ் பாவித்த சிலுவையும் கழுத்தில் அணிந்த சங்கிலி / மாலை



ஆறு பெருக்கடுத்து ஓடிய வேளையிலும் எந்த தீங்குமின்றி ஆற்றைக்கடந்தார் தூய யோசேப் வாஸ்





தூய யோசேப் வாஸ் மக்களுக்கு கொடுத்த சிலுவை (கல்கமுவ - குருநாகல் மறைமாவட்டத்தில் உள்ளது)



தூய யோசேப் வாஸ் அடிகளார் பிறந்த வீடு



மக்களுக்கு தீங்கு விளைவிக்க கூடாதென வாஸ் அடிகளார் இட்ட கட்டளைக்கு காட்டு யானை அடிபணிந்த புதுமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூய யோசேப் வாஸ்

## தூய யோசேப் வாஸ் ஆண்டிற்கான வினாவிடைப் போட்டி

01. வாஸ்கோ டி காமா இந்தியாவின் எப்பகுதிக்கு வந்து தரையிறங்கினார்?
..........................................................................................

02. ஆசியாவின் முதலாவது சுதேச மறைபரப்பாளராகக் கருதப்படுபவர் யார்?
..........................................................................................

03. தூய யோசேப் வாஸ் எந்த மறைமாவட்டத்தின் பாதுகாவலன் ஆவார்?
..........................................................................................

04. 1505இல் இலங்கையில் காலடி வைத்த முதலாவது போர்த்துக்கேயர் யார்?
..........................................................................................

05. இலங்கையில் பணிபுரிந்த முதலாவது துறவற சபை எது?
..........................................................................................

06. போர்த்துக்கேயருடைய இரு கண்களாகக் கருதப்படுபவை எவை?
..........................................................................................

07. போர்த்துக்கேயரின் பரம்பரையினர் இன்று எவ்வாறு அழைக்கப்படுகின்றனர்?
..........................................................................................

08. இலங்கையின் இறுதிச் சுதந்திர இராச்சியம் எது?
..........................................................................................

09. ஒல்லாந்தர் கற்பிட்டி பிரதேசத்தை எப்போது கைப்பற்றினர்?
..........................................................................................

10. சீனாவில் சுதேச மொழித் திருவழிபாட்டை ஊக்குவித்தவர் யார்?
..........................................................................................

11. இந்தியாவில் சுதேச மொழித் திருவழிபாட்டை ஊக்குவித்தோர் யார்? (3 பெயர்கள்)
..........................................................................................

12. தூய யோசேப் வாஸ் இலங்கையில் எங்கே தரையிறங்கத் திட்டமிட்டிருந்தனர்?
..........................................................................................

13. தூய யோசேப் வாஸ் நியமித்த பொது நிலைத் தலைவர்களின் பதவிப் பெயர்கள் என்ன?
..........................................................................................

14. 1706இல் களுத்துறையில் எத்தனை ஆலயங்கள் இருந்ததாக ஒல்லாந்த ஆவணங்கள் குறிப்பிடுகின்றன?
..........................................................................................

15. அருட்பணி யாக்கோவே கொன்சால்வேஸ் அடிகளின் கல்லறை எங்கே உள்ளது?
..........................................................................................

16. குருபாவில எங்கு அமைந்துள்ளது?
..........................................................................................

17. தூய யோசேப் வாசின் காலத்தில் இலங்கை எந்த மறைமாவட்டத்தின் கீழ் இருந்தது?
..........................................................................................

18. எந்த ஆண்டில் இலங்கை தனிநிர்வாக மாநிலமாக உருவாக்கப்பட்டது?
..........................................................................................

19. முதன்முதலாக தூய யோசேப் வாசின் வரலாற்றை நூலாக எழுதியவர் யார்? எந்த மொழியில் இந்த நூல் எழுதப்பட்டது?
..........................................................................................

20. தூய யோசேப் வாசின் வரலாற்றை முதன் முதலில் தமிழ் மொழி பெயர்த்தவர் யார்?
..........................................................................................

21. 1892இல் கீழைத்தேச நாடுகளுக்கு திருத்தந்தையின் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டவர் யார்?
..........................................................................................

22. எந்த ஆண்டில் சுவாமி ஞானப்பிரகாசர் தூய யோசேப் வாசின் வரலாற்றை மீளப் பதிப்பித்தார்?
..........................................................................................

23. யாழ்ப்பாணத்தில் தூய யோசேப் வாஸ் எத்தனை மாதங்கள் பணிபுரிந்தார்?
..........................................................................................

24. 1983இல் எந்தக் குருவுக்காக இலங்கை அரசாங்கம் முத்திரை வெளியிட்டது?
..........................................................................................

25. அருட்பணி மார்ட்டின் கெரே OMI எந்த நாட்டைச் சேர்ந்தவர்?
..........................................................................................

26. தூய யோசேப் வாசின் புனிதர் பட்டத்துக்காக உழைத்த கண்டி ஆயர் யார்?
..........................................................................................

27. திருகோணமலை நகரம் குறைந்தது எத்தனை முறை தூய யோசேப் வாசால் தரிசிக்கப்பட்டது?
..........................................................................................

28. அருட்பணி அலெக்ஸ் தசநாயக்க தூய யோசேப் வாஸ் தொடர்பாக வகித்த பதவி எது?
..........................................................................................

29. கொழும்பு நோக்கிய தூய யோசேப் வாசின் பயணத்திட்டம் இயேசு சபையினரால் எங்கு செல்லும் பயணமாக மாறியது?
..........................................................................................

30. பிரான்ஸ் நாட்டின் மிக உயர் விருதைப் பெற்ற இலங்கை நாட்டின் மறைபரப்பாளர் குரு யார்?
..........................................................................................

31. அருட்பணி பாஸ்கல் டா கொஸ்டா ஜெரேமியாஸ் எந்த மறைமாவட்டத்தைச் சேர்ந்தவர்?
..........................................................................................

32. தூய யோசேப் வாசைக் காட்டிக் கொடுத்தோரின் பரம்பரையினர் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?
..........................................................................................

33. தூய யோசேப் வாஸ் வெள்ளப் பெருக்கின் போது எந்த ஆற்றைக் கடந்தது புதுமையாகக் கருதப்படுகின்றது?
..........................................................................................

34. இலங்கை மாதா தேசிய குருமட சிங்கள மொழிக் கழகத்தின் பாதுகாவலர் யார்?
..........................................................................................

35. தூய யோசேப் வாசின் மறைவின் பின் இலங்கை ஒறத்தோரியன் குருக்களுக்குத் தலைவராக விளங்கியவர் யார்?
..........................................................................................

36. அருட்பணி பெத்ரோ பெர்ராவோ எந்த மறைமாவட்டத்தைச் சேர்ந்தவர்?
..........................................................................................

37. மருதமடு அன்னைத் திருத்தலத்தைக் கட்டியெழுப்பியவர் யார்?
..........................................................................................

38. அருட்பணி ஜோசெப் டோ ஜேசு மரியாவின் உண்மையான பெயர் என்ன?
..........................................................................................

39. ஒறத்தோரியன் சபையினர் இலங்கையில் எவ்வளவு காலம் பணிபுரிந்தனர்?
..........................................................................................

40. தென்னிந்தியாவில் தூய யோசேப் வாசை வரவேற்று உதவி செய்த துறவற சபை எது?
..........................................................................................

41. இயேசு சபைக் குருக்கள் தூய யோசேப் வாசிற்கு எந்த மொழியைக் கற்க உதவி செய்தனர்?
..........................................................................................

42. யாழ்ப்பாணத்தில் 'சின்ன உரோமை' என அழைக்கப்பட்ட இடம் எது?
..........................................................................................

43. யாழ்ப்பாணத்தில் தூய யோசேப் வாஸ் வந்த போது கத்தோலிக்கருடைய தலைவராக இருந்த பொதுநிலையினர் யார்?
..........................................................................................

44. புத்தளத்திலும் அதனை அண்டிய பகுதிகளிலும் விசுவாசத்தை வளர்த்தோர் யார்?
..........................................................................................

45. தூய யோசேப் வாஸ் வந்தபோது புத்தளத்தில் ஏறத்தாழ எத்தனை கத்தோலிக்கர் வாழ்ந்தனர்?
..........................................................................................

46. புத்தளப் பணித்தளத்தின் கீழ் தூய யோசேப் வாஸ் எத்தனை கிராமங்களைப் பராமரித்தார்?
..........................................................................................

47. தூய யோசேப் வாஸ் பிறந்த போது நடந்த புதுமை என்ன?
..........................................................................................

48. 1704இல் தூய யோசேப் வாஸ் எந்தெந்த தீவுகளைத் தரிசித்தார்? (யாழ்ப்பாணத்தில்)
..........................................................................................

49. நாரங்கொட பணித்தளம் எந்த மாவட்டத்தில் அமைந்துள்ளது?
..........................................................................................

50. இலங்கைக்கு பயணமாகும் வரை தூய யோசேப் வாஸ் தென்னிந்தியாவில் எங்கு தங்கியிருந்தார்?
..........................................................................................

51. 1704, 1710 ஆம் ஆண்டுகளில் தூய யோசேப் பணிபுரிந்த முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைந்துள்ள கிராமம் எது?
..........................................................................................

52. மட்டக்களப்பு மாவட்டத்தில் தூய யோசேப் வாஸ் மரத்தில் கட்டப்பட்டு அடிபட்ட இடம் எது?
..........................................................................................

53. தூய யோசேப் வாஸ் கொட்டியாரத்தை (மூதூர்) ஆகக்குறைந்து எத்தனை தடவைகள் தரிசித்தார்?
..........................................................................................

54. எமது மறைமாவட்டத்தில் முதன்முதலாக எந்த இடத்தில் தூய யோசேப் வாசுக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஆலயம் கட்டப்பட்டு வருகின்றது?
..........................................................................................

55. எங்கு பணிபுரிந்து கொண்டிருந்த போது தூய யோசேப் வாஸ் நோயுற்றார்?
..........................................................................................

பெயர்:..........................................................................
பங்கு:..........................................................................
முகவரி:..........................................................................



**தூய யோசேப் வாஸ் ஆண்டுக்கான மாபெரும் வினாவிடைப் போட்டி**

- தை மாதத்திலிருந்து ஐப்பசி மாதம் வரை 'திருமலைத்தீபத்தில்' வெளியான 'தூய யோசேப் வாஸ்' எனும் தொடர் கட்டுரைகளிலிருந்து இவ்வினாக்கள் எடுக்கப்பட்டுள்ளன.
- இவற்றுக்கான விடைகளை எழுதி 06 ஜனவரி 2018 இற்கு முன் கிடைக்கக்கூடியதாக மறைக்கல்வி நடுநிலையத்திற்கு நேரடியாகவோ தபால் மூலமாகவோ கிடைக்கக்கூடியதாக அனுப்பவும்.
- விடைகளை பத்திரிகையிலேயே தரப்பட்டுள்ள இடைவெளிகளில் எழுதி அனுப்பவும்.
- போட்டோ பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
- வயதெல்லை கிடையாது.
- மிக அதிகளவான சரியான விடைகளை எழுதுவோர் மத்தியிலிருந்து முதலாவது, இரண்டாவது, மூன்றாவது இடத்திற்குரியவர்கள் தெரிவு செய்யப்படுவர்.
- பெறுமதியான பரிசுகள் வழங்கப்படும். 10 ஆறுதல் பரிசில்களும் வழங்கப்படும்.
- இறுதி முடிவுகள் மறைக்கல்வி நிலையத்தினால் எடுக்கப்படும்.

**இலங்கையின் திருத்தூதரான தூய யோசேப் வாஸ் முனிவரே, எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்!**

அருட்பணி. எஸ். ஆர். ஜெயரெட்ணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "நத்தார்" பிறருக்காக வாழ ஓர் அழைப்பு

'நமக்காக ஓர் குழந்தை பிறந்துள்ளது. நமக்கு ஒரு மகன் தரப்பட்டுள்ளார்' என்ற இறைவாக்கினர் எசாயாவின் வார்த்தைகள் இன்று, உங்களுக்காக மீட்பர் பிறந்துள்ளார் என்ற வானதூதுவனின் செய்தியில் எதிரொலிக்கின்றது.

தனக்காக வாழ்ந்து மடியும் மனிதனுக்கு வாழ்வின் வழியைக் காட்டவே மானிடமகன் நமக்காக மனிதனாகினார். தம் தோள் சுமத்தப்பட்ட நுகத்தையும், தோளைக் காயப்படுத்திய தடியையும். ஒடுக்கியவனின் கொடுங்கோலையும் மறந்து அவர்களுக்கு மன்னிப்பு சமாதானம் என்ற இறை அன்பின் உன்னத கொடையை கொடுத்திருக்கின்றார். நமக்கு மீட்பை மட்டும் பெற்றுத் தருவதாக இருந்திருந்தால் விண்ணகத்திலிருந்தே பெற்றுத் தந்திருக்கலாம். ஆனால் அதிலே நம்முடைய பங்கை நாம் செய்ய வேண்டும் என்று கற்பிக்கவே மனிதரில் மனிதராகின்றார், ஏழைகளில் ஏழையாகின்றார். மாந்தர் நமக்காக பிறந்த அவர் நமக்காகவே வாழ்ந்தார், நமக்காகவே இறந்தார், நமக்காகவே உயிர்த்தெழுந்தார். மனிதனை நோக்கிய அவரது திருப்பயணம் உணர்த்தும் உண்மைகளில் ஒன்று மனிதன் தனக்காக படைக்கப்பட்டவன் அல்லன் என்பது தான் அவரது பிறப்பு கொண்டு வந்த வாழ்வையும், அமைதியையும், மகிழ்ச்சியையும், சமாதானத்தையும் நிறைவாகப் பெற நாம் பிறருக்காக வாழ வேண்டும்.

நம்முடைய நத்தார் கொண்டாட்டம் வெறுமனே ஆடம்பர போக்கில் கழியப் போகிறதா? அல்லது மற்றவரின் அன்பின் நிமித்தம் அர்த்தமுள்ளதாக்கப்படப் போகிறதா? இறை உறவின் அன்பு எம்மிலே பிறருடாக வெளிப்படுவது நாம் அறிந்திடோம். ஆனால் அவை எம்மிலே செயலாற்றும் போது பிறரே அதை அனுபவிக்கின்றனர். எனவே நாமும் மற்றவரின் அன்பில் எம்மையும், எமது அன்பையும் இணைத்து இனிய நத்தார் விழாவைக் கொண்டாடுவோம்.

" WE WELCOME THE PRINCE OF PEACE"

த. அனோஷன் பேட்ரம்,
அ.ம.தி. குருமடம்,
கொழும்புத்துறை,

## கிறிஸ்மஸ் சிறப்புப் போட்டி

மண்ணிலே மலர்ந்ததே மகிமை FR.NC

- 12 வரிகள் கொண்ட கவிதை
- சரியாக அவதானித்து வடிவமையுங்கள்
- எல்லோரும் கலந்து கொள்ளலாம்
- எல்லோரும் சரியாக வடிவமைத்தால்
- குலுக்கள் முறையில் தெரிவு இடம்பெறும்

- முதலாம் இடம் 500/-
- இரண்டாம் இடம் 400/-
- மூன்றாம் இடம் 300/-
- நான்காம் இடம் 200/-
- ஐந்தாம் இடம் 100/-

முடிவுத்திகதி 06.01.2018

இதோ கவிதை வரிகள்......

❖மண்ணிலே மகிமை மலர்ந்து நின்றதே
❖கண்கண்ட காட்சிகள் மனதை நிறைத்திட
❖வாழ்த்தியே மகிழ்ந்து செல்கின்றார்
❖ஞானிகள் மூவரும் வந்தங்கே
❖வானிலே தோன்றிய தாரகை கண்டே
❖வானவர் கீதங்கள் பாடிடவே
❖மாமரி மகனாய் அவதரித்தாரே
❖மாடடை குடிசையில் தோன்றியவர்
❖ஏழ்மையின் வடிவிலே இறைமகனார்
❖வறுமையின் வடிவம் தனையேற்று
❖கோரக்குளிரின் காலமுமாம்
❖கொட்டும் பனியும் மழையுடனே

## அமைதியைக் காணவே ..... அருட்பணி N.C. அருள்வரதன்

அமைதியைத் தேடும்
உள்ளங்களெங்குமே
ஆவலாய் எதிர்பார்த்து
காத்திருக்க
அமைதியே மறைந்து
கலைந்து அது
எங்கோ ஒதுங்கிக் கொண்டதுவே

கலகங்கள் கலவரங்கள்
பதட்டங்கள் பெருகியே
அமைதியே கலைந்து
தொலைந்த போது?



அமைதியைக் காண
தேடும் மனங்கள்
ஆவலாய் எங்குமே
காத்திருக்க அதை
காணக்கிடைக்காமல்
கவலையில் மூழ்கும்
நல்ல மனங்களும்
மறையவில்லையே

மாணவர்காணும்
வேதனைகள்
பெற்றோர் பெரியோரின்
சோர்வு நிலைகள்
குலைந்து கலைந்த

ஆட்சியாளருக்கும்
எதிரணிகளுக்கும்
அதிகாரங்களைக் காட்டுவதில்
முரண்பாடுகள்
வெடித்துப் பரவும்
வேளைகளில்
அமைதியைக் காண்பது
எப்படியோ?

போலி வேடங்களை
புறந்தள்ளி விட்டு
அமைதியே வாழ்வுக்கு
அடித்தளமென்பதை
அனைவரும்
ஏற்றுக்கொள்ள வேண்டி
மனங்களை மாற்றிட
வேண்டுவோமே



# தூய மத்தேயு ஆண்டு





### இயேசுவின் பிறப்பும் குழந்தைப் பருவமும்
### மத்தேயு 1: 1 – 2: 23

❖ **இயேசுவின் மூதாதையர் பட்டியல்:**

1.இயேசுவே உண்மையான வாரிசு என்பதைக் காட்டுகின்றது (1:1~2)
2.பரந்து வாழும் யூதர்களுக்கு பெரும் நம்பிக்கையைக் கொடுக்கின்றது (1:2)
3.இறைவனின் அருள்மிகுந்த இரக்கத்தை அடையாளப்படுத்துகின்றது (1:3~6)
4.இறைவன் தனது அருளாசீரை அவர் விருப்பத்திற்கே தருகிறார். நாம் பெறுவதல்ல (1:7~10)
5.வாக்குறுதியை நிறைவேற்றும் இறைவனின் சக்தியைக் காட்டுகின்றது (1:11~16)
6.பரம்பரையாக வந்த ஆன்மீக சரித்திரத்தை அடையாளப்படுத்துகின்றது. (1:17)

❖ **தொடர்ச்சியான ஆபத்துக்கள்:**

1.இயேசுவைத் தேடிக் கண்டுபிடிக்க ஏரோதுவின் சூழ்ச்சி (2:12)
2.இயேசுவைஅழிக்க ஏரோதுவின் பாரியமுயற்சி
3.ஆர்க்கெலா மன்னன் யூதேயாவைஆண்டது (2:19 – 23)

❖ **இயேசுவின் பிறப்பும் அசாதாரணநிகழ்வுகளும்:**

1.இயேசுவின் பிறப்புதூயஆவி மூலம் நடைபெற்றது (1:18)
2.இயேசுவின் பிறப்பு இக்கட்டான சூழலைஉருவாக்கியது (1:18~19)
3.இயேசுவின் பிறப்புபாரியஉண்மையைவெளிப்படுத்தியது (1:20~21)
4.இயேசுவின் பிறப்பு இறைவாக்குகளின் முழுமை (1:22~23)
5.இதுபாரியகீழ்ப்படிவையும் வெளிப்படுத்தியது (1:24~25)

❖ **இயேசுவை அரசன் என மூன்று ஞானிகளும் ஏற்றல்:**

1.எதிர்பாராதமெசியாஎருசலேமில் பிறந்தார் (2:1)
2.ஞானிகளின் எதிர்பார்க்கப்படாத கேள்வி: " யூதர்களின் அரசராகப் பிறந்திருக்கிறவர் எங்கே?" (2:2)
3.அரசன், எருசலேம் கலங்கியது. (2:3~6)
4.எதிர்பாராத கட்டளை ஞானிகளுக்குக் கொடுக்கப்பட்டது (2:7~8)
5.எதிர்பாராதவிதமாக விண்மீன் மீண்டும் தோன்றி வழி நடத்தியது. (2: 9 ~10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயர் பணியில் வெள்ளிவிழா நிறைவு செய்கிறார்

மன்னார் மறைமாவட்டத்தின் ஓய்வுநிலை ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்கள் தனது ஆயர்த்துவப் பணியில் 25 வருடங்களை நிறைவு செய்கிறார். இவர் மன்னார் மறைமாவட்டத்தின் இரண்டாவது ஆயர் ஆவார்.

ஆயர் அவர்கள் யாழ்ப்பாணம் நெடுந்திவில் 1940ம் ஆண்டு பிறந்தார். அவர் தனது பாடசாலைக்கல்வியை நெடுந்தீவு றோமன் கத்தோலிக்கப் பாடசாலையிலும். மன் / முருங்கன் மகாவித்தியாலயத்திலும், யாழ் தூய பத்திரிசியார் கல்லூரியிலும் கற்றார். தனது குருத்துவக் கல்வியை கண்டி தேசிய குருமடம், திருச்சி (இந்தியா) தூய பவுல் குருமடம் ஆகியவற்றில் நிறைவு செய்து ஆயர் மேதகு எமிலியானூஸ் பிள்ளை ஆண்டகை அவர்களால் 13.12.1967ம் ஆண்டு யாழ் மரியன்னை பேராலயத்தில் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

இவர் பணிபுரிந்த இடங்களாக : ~

1968 – 1971 – உதவிப்பங்குத்தந்தை : உயிலங்குளம், முருங்கன், இளவாலை, சேந்தாங்குளம்

1971 – 1975 – பங்குத்தந்தை : உரும்பிராய். சுன்னாகம்

1975 – 1980 – பங்குத்தந்தை : பெரியவிளான், பண்டத்தரிப்பு ஆகிய இடங்களில் பணியாற்றினார்.

1981– 1985 – வரை உரோமைப் பல்கலைக்கழகங்களில் உயர்கல்விக்கான பல்வேறு கற்கை நெறிகளை மேற்கொண்டதுடன் திருச்சபைச் சட்டத்துறையிலும் கலாநிதிப் பட்டம் பெற்றார். அதன் பின் யாழ். தூய திருமுழுக்க யோவான் ஆலயப் பங்குத்தந்தையாகவும், அத்தோடு யாழ். கொழும்புத்துறை தூய பிரான்சிஸ்கு சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரியில் திருச்சபைச் சட்ட விரிவுரையாளராகவும், மறைமாவட்ட திருமண நிதிமன்றத்தில் சட்டக் காவலராகவும் பணியாற்றினார்.

1992ம் ஆண்டு யூலை 6ம் திகதி திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பர் மன்னார் மறைமாவட்டத்தின் ஆயராக நியமித்தார். 1992.10.20ம் நாள் ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை அவர்களால் ஆயராகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

ஆயர் அவர்கள் தமது பணிக்காலத்தில் மறைமாவட்டப் பணிகளைச் செய்தது மட்டுமல்லாது, துன்புற்ற நிர்க்கதியான மக்களின் துயரம் துடைத்தார். எங்கு தேவையேற்பட்டதோ அங்கு சென்று நிற்பவர தான் ஆயர் இராயப்ப யோசேப்பு ஆண்டகை அவர்கள்.

ஆயரின் பணிக்காக நன்றி கூறுவதோடு அவரது ஆன்ம. உடல் சுகத்திற்காகவும் "திருமலைத்தீபம்" வேண்டி நிற்கின்றது.

# கூவாத குயிலுண்டோ......!

கூ.........! கூ..............!
கூவாத குயிலுண்டோ
இல்லை! இல்லை
ஆடாத மயிலுண்டோ
இல்லை இல்லை
பேசாத கிளியுண்டோ
துள்ளாத மானுண்டோ
இல்லை இல்லை
அலையில்லாத கடலுண்டோ
இல்லை இல்லை
பாயாத புலியுண்டோ
ஆதாமில்லாமல் நாமுண்டோ
இல்லை இல்லை
சிலுவைகள் சுமக்காத
தோள்களுமுண்டோ
இல்லை இல்லை



விசுவாசமில்லாமல்
திருச்சபை உண்டோ
இல்லை! இல்லை!
மாதா இல்லாமல்
மகனான இயேசு உண்டோ
இல்லை இல்லை
பாவம் பொறுத்தல் பெறாத
பாவி உண்டோ!
உண்டு! உண்டு!
இவர்கள் யார்?
நீயா இல்லை நானா?
என்ன இருவரும் மௌனித்தோம்
நமது மௌனத்தைக்
கலைப்போம்
இயேசுவுடன் வாழ்வோம்
கூ................ கூ................



ஆக்கம் : கலைக்கோட்டன்
அ. இருதயநாதன்

# இளையோர் திறன் உயர........

சென்ற இதழ் தொடர்ச்சி ................

## சர்க்கரை பொம்மையும் தண்ணீரும்

சர்க்கரை பொம்மையைத் தண்ணீரில் வைத்தால் சர்க்கரை தன்னைக் கரைத்து நீரைச் சுவையாக்குகிறது.

**முதலாவது வெட்டி வாழ்க்கை இரண்டாவது சுயநல வாழ்க்கை. மூன்றாவதாக உள்ள வாழக்கையைத் தான் மனிதன் வாழ வேண்டும்.**

மனிதர்களில் மூன்று வகையினர் உண்டு.

முதலாமவர் : இருளில் விழித்திருப்பவர்கள்
இரண்டாமவர் : ஒளியில் தூங்குபவர்கள்
மூன்றாமவர் : ஒளியில் வாழ்பவர்கள்

ஒரு தோழர் சொன்னார், 'தோழா நீ இந்தச் சமூகத்திற்கு எதுவுமே செய்யாமல் வாழ்ந்து இறந்தால் உன்னைப் பிணமாய்ப் பார்ப்பார்கள். சமூகத்திற்கு ஏதாவது செய்து இறந்தால் வரலாறாய்ப் பார்ப்பார்கள்'. அந்தக் கேள்வி ஒவ்வொருவருக்கு முன்னும் இருக்கிறது. நாம் இறந்து கிடக்கும் போது பிணமா? வரலாறா? **இந்தக் கேள்விக்கு விடை தேடும் மனத்தோடு செயல்படுவோம் நம் இதயம் இயங்கும் வரை....!**

## 05. மனிதத்தின் உயர்வு

'இளைஞர்களின் இதயங்கள் எங்கோ தறிகெட்டு ஓடிக்கொண்டிருக்கின்றன' என்று விரக்தியாய் ஒரு பேராசிரியர் கூறி கோபப்பட்டுள்ளதை ஒரு முறை நாளிதழில் காண முடிந்தது. உண்மையா இந்தக் கூற்று! என்று யோசித்தது உண்டு. இதற்கான விடையை ஒரு தேர்தல் முடிந்த அன்று செய்தித்தாளில் காணமுடிந்தது. தமிழகமெங்கும் தேர்தல் கலவரத்தில் பெட்ரோல் குண்டுகளுடன் கைது செய்யப்பட்டவர்களுள், தடியடிக்கு உட்பட்டவர்களுள், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவர்களுள் பெரும்பாலானோர் 25 வயதிற்கு உட்பட்டவர்களே! இந்தச் செய்திகள் இளைஞர்களின் தர நிலையைக் கேள்விக்கு உட்படுத்தியது. இளைஞர்களை கைப்பாவையாக்கிய அரசியல்வாதிகளை என்ன சொல்வது?

நிக்பார் பாமர் என்ற ஒரு பட்டதாரி. பிலிப்பைன்ஸ் நாட்டுச் சிறையில் உள்ள தண்டணைக் கைதி. இவர் சிவில் சர்வீஸ் தேர்வு எழுதுவதற்காகச் சிறையிலிருந்து அனுப்பப்பட்டார். அனுப்பி வைத்தார் சிறை அதிகாரி. நிக்பார் சிறப்பாக தேர்வு எழுதிக்கொண்டிருந்தார். தேர்வு எழுதிக் கொண்டிருக்கும் போதே அவரைக் கைது செய்ய வந்தது காவல் துறை. அப்படி என்ன குற்றம் செய்தார்? அவர் தேர்வு எழுதியது அவருக்காக அல்ல, சிறை அதிகாரிக்காகத்தான். அப்படியென்றால், வேலி பயிரை மேய்ந்ததை விட மேலான குற்றம் இங்கு நடந்திருக்கிறது. இளைஞர்களுக்கும் இப்படிப்பட்ட குற்றம் தான் நிகழ்த்தப்படுகின்றது.

வாய்ப்புக்கள். ஆளுமைத்திறன், உத்திகள், அறிவு, பலம், தேடல், எண்ணம், சிந்தனை, ஒருங்கிணைப்புச் சக்தி, உழைக்கும் திறன், துடிப்பு, வேகம்..... இவ்வாறு பட்டியலை மீறும் பலங்கள் இருந்தும் மாயைகளிடமும் போலிகளிடமும் போய் வீழ்ந்து பலவீனப்பட்டு அழிகின்றனர் இளைஞர்கள். பலன்களை வேறு யாரோ ருசிக்க, சக்கைகளாய் எறியப்படுகிறார்கள் இளைஞர்கள். மாறுதல்கள்தானே மனித உணர்வு. மாறுதல்களைக் கருத்தறிக்க எப்போது தயாராவார்கள் இளையோர்கள்? என்பதே பலருடைய கேள்வியாக உள்ளது.........

தொடரும்..................

# குடும்ப நற்பணிகள் ஆண்டு

## குடும்பம் பற்றி திருத்தந்தை





- குடும்பங்கள் இறையன்பைக் கண்டுணர்ந்து திறந்த மனது, மன்னிப்பு. பொறுமை, உதவி, மதித்தல் போன்றவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும்.
- "தயவுசெய்து", "நன்றி", "மன்னிக்கவும்" எனும் வார்த்தைகளை அடிக்கடி பயன்படுத்தினால் குடும்பங்கள் முன்னேறும்.
- அன்பை மையமாகக் கொண்ட குடும்பமே இறைவனின் அன்பையும், புனிதத்தையுமே பகிரவும் வாழ்ந்து காட்டவும் முடியும்.
- அன்பில்லாமல் நாம் இறைவனின் பிள்ளைகளாகவோ, தம்பதியராகவோ, பெற்றோராகவோ, சகோதர சகோதரிகளாகவோ வாழமுடியாது.
- குடும்பவாழ்வு அன்பைத் தளமாகக் கொண்டிருப்பதை நாம் உறுதிசெய்ய வேண்டும். அன்பிற்காகவும் அன்பிலும் வாழ வேண்டும்.
- அன்பில் வாழ்வதென்பது: விட்டுக்கொடுப்பது, மன்னிப்பது, பொறுமை காப்பது, மதித்தல் போன்ற நற்பண்புகளை வாழ்ந்து காட்டுவதாகும்.
- ஒவ்வொரு குடும்பத்திலும் குழப்பங்கள், துன்பம், போராட்டங்களும் உள்ளன. அனைத்துக் குடும்பங்களும் ஞான மேய்ப்பர்களும் தாழ்ச்சியோடு நல்ல சீடர்களாகவும், ஆசிரியர்களாகவும் வாழ்ந்து காட்டவேண்டும்.
- இறைவனின் குணமளிக்கும், விடுதலையளிக்கும் இரக்கத்தை அனுபவிக்கும் தளமாக குடும்பம் அமைய வேண்டும்.
- தம்மோடு உடன் பயணிக்கின்ற, இறை விருப்பத்தை உணர உதவுகின்ற, திருச்சபையையே இன்று குடும்பங்கள் எதிர்பார்க்கின்றன
- மகிழ்ச்சியும், ஆன்மீக ஆழமும் கொண்ட குடும்பங்கள் ஏனைய குடும்பங்களுக்கு பேருதவியாகவும் உதாரணமாகவும் அமைந்து விடுகின்றன.
- தமது பெலவீனங்களால் விழுந்து விடுகின்ற குடும்பங்களைத் தாங்கி, தூக்கி விடுகின்றவர்களாக ஆன்மீகத் தலைவர்களும் பங்கில் குடும்ப நற்பணி அமைப்புகளும் இருக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறந்தநாள் வாழ்த்துக்கள்




1932

10

30

## திருமதி மேரி மலர் ஸ்ரனிஸ்லாஸ்

(இளைப்பாறிய உதவி அதிபர் )

*பத்து மாதம் சுமந்து பகலிரவாய் கண்விழித்து*
*பாரினிலே மேன்மையுடன் நாம் வாழ*
*பக்குவமாய் எமை வளர்த்த தாயே*
*பணிந்து வணங்குகின்றோம் உம்மை*

*கல்வியிலே நாம் உயர காலமெல்லாம்*
*எமைத் தாங்கி கரைதனையே*
*காண வைத்த காருண்ணியத்தாயே*
*கண்கண்ட தெய்வம் நீயல்லவோ*

*அன்போடும் பண்போடும் அவனிமீது வலம் வரவே*
*எம்மோடு சேர்ந்திருந்து செய்திட்ட தியாகங்கள்*
*நெஞ்சோடு என்றும் நினைத்துப் பார்க்கின்றோம்*
*செஞ்சோற்றுக் கடன் தீரும் எப்போதே*

*பட்டப்படிப்பு முதல் பதவி பெறும்வரை*
*பட்டபாட்டை நாம் எப்படி மறப்போம் அம்மா*
*கட்டுக் கோப்புடன் எமை வளர்த்த தாயே*
*மட்டில்லாமல் மகிழ்வுடன் நீர் வாழ வாழ்த்துகின்றோம்*

*அன்பை விதைத்த அன்னையல்லோ*
*அறிவை வளர்த்த ஆசானல்லோ*
*அள்ளிக் கொடுத்த கைகளல்லோ*
*ஆண்டவன் தந்த கொடையல்லவோ*

*எண்பத்தாறு வயதினிலும்*
*ஏறு போல் நிமிர்ந்து நின்று*
*வண்ணமணி மலராகக் காட்சி தரும் அம்மா*
*வானிறைவன் காத்திடுவார் நாளும் உம்மை*

*அன்புடன் மகள்*
*வத்ஸலா கிருபாகரன்*

# விவிலிய நாணயங்கள்

மத்தேயு நற்செய்தி. அதிகாரம் 17:24 முதல் 27 வரையான இறைவார்த்தைகளில் வரி கட்டும் நாணயம் பற்றிய ஒரு குறிப்பு உள்ளது. இந்த நாணயத்தின் பெயர் திராக்மா. இங்கு குறிப்பிடப்பட்டிருக்கும் வெள்ளி நாணயம். லூக்கா 15:8இல் குறிப்பிடப்பட்டிருக்கும் நாணயத்தை விட இரண்டு மடங்கு மதிப்புள்ளது என்றும் ஒரு குறிப்பு உள்ளது. மேலும், மத்தேயு நற்செய்தி 17:24–27இல், ஸ்தாத்தேர் நாணயம் பற்றிய குறிப்பும் உள்ளது. இந்த நாணயத்தின் ஒரு புறம் அகுஸ்துஸ் சீசருடைய உருவப்படமும். கிரேக்க மொழியில் KAISAROS SEBAS-TOU என்ற வார்த்தைகளும் பொறிக்கப்பட்டிருக்கும். மறுபுறம், அந்தியோக்கு நகரை பிரதிபலிக்கும் விதமாக, ஒரு பெண் அர-யணையில் அமர்ந்திருக்கும் உருவமும் ANTX என்ற வார்த்தைகளும் பொறிக்கப்பட்டிருக்கும்.




# குடும்ப அப்போஸ்தலத்துவம்
# ஆரம்ப திருமணமும் அவசர திருமணமும்

இறைவன் இரண்டு பொம்மைகள் செய்தான். தான் விளையாட, அவை இரண்டும் சேர்ந்தொரு பொம்மையைச் செய்தன. தாம் விளையாட...... கவிஞனின் இவ்வரிகளை ஆழமாகச் சிந்தித்தால், எம் மனக்கண்ணில் ஏதேன் தோட்டம் நிழலாடும். மனிதன் தனித்திருப்பது நல்லதல்ல எனக்கண்ட இறைவன் தகுந்த துணையை உருவாக்கி, பல்கிப் பெருகி பூமியை நிரப்புங்கள் எனக் கூறி படைப்பாற்றலை மனிதன் கையில் ஒப்படைத்து விட்டு ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார். இதுவே திருவிவிலியம் கூறும் உண்மை.

இவ்வாறு ஆதியிலே இறைவனால் உருவாக்கப்பட்ட இல்லறத்தில் இன்று நடப்பதென்ன??



'அழகான அணிந்தையவளை
அந்தி சாலையிலே பார்த்து விட்டேன்.
படிக்கும் என் மனத்தை அவளிடம்
பறிகொடுத்து வந்துவிட்டேன்
மாலையிலே பார்த்தவளை
மனதிலே இருத்தி விட்டேன்
காலையில் அவளோடு ஓடிப்போய்
காந்தர்வம் செய்தும் விட்டேன்.



இது கவிஞன் ஒருவனின் வேடிக்கைக் கவிதை வரிகள்.

இவை மட்டுமல்ல. நவீன தொலைத்தொடர்பு சாதனங்கள் மூலமாக (Viber, Whatsapp, IMO, Twitter, FB, Google......) என உருவாக்கப்படும் திருமணங்களின் நிலை தான் என்ன? இவ்வாறான திருமணங்களை நோக்கும் போது பணம், அழகு, அந்தஸ்து, சீதனம், கவர்ச்சி என்பன முதன்மை வகிப்பதே வெளிப்படையான உண்மையாகும்.

இன்று இருமனம் இணையும் திருமணம் எனும் அருளடையாளம் என்ன என்பது பற்றி யாருமே ஆழமாக சிந்திப்பதை மறந்துவிடுகிறார்கள். 'நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்' என்பார்கள். பல்கலைகளையும் கற்றுக் கொடுக்கும் இடமே குடும்பம். நல்ல சமூக உருவாக்கத்தில் குடும்பங்களே முதன்மை வகிக்கின்றது. விட்டுக்கொடுப்பு. அன்பு. பகிர்வு, உற்சாகமூட்டல். வழிகாட்டுதல், மன்னித்தல் முதலான சமூக விழுமியப் பண்புகள் விதைக்கப்படும் இடம் குடும்பமாகும்.

எனவே நல்ல குடும்பங்களை உருவாக்க வேண்டியது எமது கடமையாகும். இறைவனின் திட்டம் நிறைவேற இடமளித்து, இல்லறத்தை ஆரம்பித்தால் அங்கு ஆசிர்வாதங்களுடன் குடும்ப வாழ்வு சிறக்கும்.

வாழ்க்கை ஒரு பரிசு அதனை ஏற்றுக் கொள்ளுங்கள்.
வாழ்க்கை ஒரு இரகசியம் அதைக்கண்டறியுங்கள்.
வாழ்க்கை ஒரு சந்தர்ப்பம் அதனை தவறவிடாதீர்கள்.
வாழ்க்கை ஒரு பயணம் ஆனந்தமாகப் பயணியுங்கள்.
வாழ்க்கை ஒரு உறுதிமொழி அதனை நிறைவேற்றுங்கள்
வாழ்க்கை ஒரு போராட்டம் அதனை எதிர்கொள்ளுங்கள்
வாழ்க்கை ஒரு சவால் அதனை வென்றிடுங்கள்
வாழ்க்கை ஒரு இலக்கு அதனை எட்டிப் பிடியுங்கள்

தொலைவது எதவானாலும்
இணைவது இருமனமே ~ எனவே
இணையும் இருமனங்களை
இயல்பிலே பிரிக்காதிருப்போம்

திருமதி. சிந்துஜா லெப்பன்,
குடும்ப வாழ்வுப் பணிகள்

# பூலோகம் தான் பரலோகம்



கிறிஸ்மஸ் வந்தாச்சு என்றால் எல்லோருக்கும் கொண்டாட்டமும், குதூகலமும் தான். வீட்டுக்கு வர்ணம் பூசுவதும். வண்ணப் புத்தாடைகள் வாங்குவதும் அழகிய அலங்கரிப்புக்களைச் செய்வதும். அறுசுவை உணவு தயாரிப்பதும், மாட்டுத் தொழுவம் அமைத்து மைந்தன் இயேசுவை வரவேற்பதும் வழக்கமான நிகழ்வுகளாகி விட்ட போதிலும், ஏன் எதற்காக இயேசு மனுவுருவெடுத்தார்? என்பதை சிந்திக்கத் தவறுகின்றோம். ஆன்மீக ஆயத்தங்களை அடியோடு மறந்து விடுகின்றோம்.

'என்ன வீட்டில பெரிய ஆரவாரமாக இருக்குது?' என்று அயலவர்கள் வினாத் தொடுத்தால், 'எங்களுக்கு நத்தார் தானே வீட்ட கொஞ்சம் அழகா வைப்பம் எண்டு பாக்கிறம்' என்று பதிலளிப்பவர்களாக உள்ளோம். கிறீஸ்து பிறப்பு பெருவிழா கிறிஸ்தவர்களாகிய எமக்கு மட்டுமுரியதல்ல. அனைவருக்குமுரியது என்பதை மறந்தும், அக ஆயத்தங்களில் அல்லாமல் புற காரியங்களில் கவனம் எடுப்பவர்களாகவும் இவ்வாறு பேசுகின்றோம்.

மானிடர் யாவரும் மனிதத்துவம் நிறைந்தவர்களாக எப்படி வாழ வேண்டும் என்பதை எடுத்துரைக்கவே மானிடமகன் இயேசு மனிதவதாரம் எடுத்தார். கடவுளே மனுவுரு எடுத்தாரெனில் அந்த மானிடப் பிறப்பு எவ்வளவு உன்னதமானது, மேன்மையானது, மேலானது என்பதை நாம் சற்றுச் சிந்திக்க வேண்டுமல்லவா! மனுவுரு எடுத்த மைந்தன் இயேசு மண்ணிலே வந்துதித்து மக்களுக்குகந்தவராக, உதவுபவராக, உத்தமராக. உன்னதமானவராக, போதனையாளனாக, போதித்ததைச் சாதித்தவராக. மன்னித்தவராக, மனமாற்றத்தை ஏற்படுத்தியவராக. மாபெரும் பணியாளனாகி, தன் காலத்தைக் களிப்புள்ளதாக்கினார்.

இறைவனின் உருவிலும், சாயலிலும் படைக்கப்பட்ட மானிடர் நாம் இன்று எம் வாழ்வை எப்படி அமைத்துள்ளோம்? இறைசாயல் எம்முள் இருந்தும், அதன் தன்மை எம்மில் பிரதிபலிக்கின்றதா? மாபரன் இயேசுவை வரவேற்க மாட்டுத்தொழுவம் மட்டும் அமைத்தால் போதாது. ' அவர் (இயேசு) உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்' (யோவான்2:5) என்ற தூய மரியாவின் வசனமதை வாழ்வாக்கிட, இயேசுவின் போதனைகளை சாதனைகளாக்கி நல்வாழ்வு வாழ்வோம். ஆண்டவரை மறந்து, அகில சுகங்களுக்கு ஆதரவு அளிப்பதால் அவரது அன்பை அவமதிக்கின்றோம், தூக்கியெறிகின்றோம். அவரை விட்டுத் தூரச் செல்கின்றோம். இதனால் பலவீனமான மனிதன் பலமிழந்து பரிதாப நிலைக்குள்ளாகி நிற்கின்றனர். இறையன்பை மானிடர் மறந்தாலும், இளகிய உள்ளம் கொண்ட இறைவன் எம்மை இருகரம் நீட்டி, தம்மண்டை அமைதியாக வாழ அன்போடு அழைக்கின்றார். இறைபிரசன்னத்திலிருந்து விலகிய நாம், எம் உள்ளத்தை இறைவன் வாழும் இல்லமாக்கி, அவரது நிறைவான ஆசீர்வாதத்தையும், அருட்கொடைகளையும் அள்ளிப் பெற்றிட எம்முள் மாற்றத்தை ஏற்படுத்திட வேண்டும்.

வாழ்வின் வசந்தமான ஆண்டவரை உதறிய மக்களை உன்னதமான நிலைவாழ்வுக்கு இட்டுச் சென்ற நாள்தான் கிறிஸ்மஸ். இயேசுவின் பிறப்பு மூலமாகத்தான், இறைவனது மீட்பின் வாக்குறுதி நிறைவேறியது. பரிசுத்தாவியின் வழியாகப் பரலோகம் பாரிலே இறங்கிய நாள் தான் நத்தார். துன்புறுவோரின் துயர் துடைப்பவராக, பாவிகளுக்கு பாதை காட்டுபவராக, பாதம் பதித்த பரமன் இயேசுவின் பாதையில் பயணித்து புதுயுகம் காண்போம். புது உலகம் உருவாக்க எம்மை அர்ப்பணிப்போம். மாற்றம் காண்போம். எம்மில் மாற்றம் காண்போம். மாற்றம் ஏற்படுத்துவோம். பிறரில் மாற்றம் ஏற்படுத்துவோம். இம்மண்ணகத்தை இறைவன் வாழும் விண்ணகம் ஆக்கிடுவோம்.

' இதோ கடவுளின் உறைவிடம் மனிதர்
நடுவே உள்ளது. அவர் அவர்கள் நடுவே
குடியிருப்பார்' (தி.வெ 21: 3)

**ஆக்கம் : ஜெயவதனி மரியதாஸ்,**
**(ISA - R.C + N.R.C)**
**செல்வநாயகபுரம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இறை அனுபவத்தின் ஓர் இனிய அழைப்பு

கிறிஸ்டி முருகுப்பிள்ளை





அன்று பிற்பகல் கலாநிதி ஜோண்பொஸ்கோ அவர்கள் தலைமைத்துவம் தொடர்பாக மேலும் விளக்கமளித்தார்.

"leaders wants to know the way
leaders wants to show the way
leaders wants to leads the way"

இந்த தலைமைத்துவப் பண்புகளைப் பெற ஜெபம் ஓர் ஊடகமாக உதவும் என்றார். தொடர்ந்து ஜெபம் என்பது இறைவனுடைய கொடை... அது ஒரு கலை. ஜெபத்தைத் தூண்டுபவர் பரிசுத்த ஆவி... அத் தூண்டுதலைக் கொடுப்பவரே கடவுள் தான். தன்னை வெளிப்படுத்துவதற்கு முயல முயற்சி எடுத்து நம்மைத் தூண்டுகிறார். கடவுள் மீது நாம் கொண்ட நம்பிக்கையுணர்வில் ஏற்படுவது ஜெபம்... இந்த ஜெபத்தின் அருட்டல் நிலையில்... பரவச நிலையில் பஜனை எனும் பக்தி நிலைக்கு வருகிறோம். திரும்பத் திரும்ப தாளக் கட்டோடு ரிதத்தோடு பாடுவதே பஜனையாகும். பஜனையின் பின் நம் உடலையும் உள்ளத்தையும் அமைதியடையச் செய்து மௌன நிலைக்கு எம்மை ஆட்படுத்திக் கொள்ள வேண்டும் என்று விளக்கினார்.

"God's Language is silence"

தொடர்ந்து ஹாயிஸ் சுவாமிகள் வழிபாட்டின் ஐந்து படிமுறைகள் பற்றி விளக்கினார்.



ஞானம் ~ கல்விக்கு அப்பாற்பட்ட அறிவு

தரிசனம் ~ எங்கும் இறைவனின் இருப்பை உணர்வது

ஜனனம் ~ இறைவனுள் புதிய பிறப்பை உணர்வது

ஆஸ்ரம் ~ லௌகீக நிலையைத் துறத்தல்

பூரணம் ~ உலகினின்று விடுபட்டு இறைவனோடு ஐக்கியமாகுதல்.

திருச்சபையின் முன்னுள்ள நிலைமையில் அதாவது பழைய கண்ணோட்டத்தில் இறைவன் ஓய்வெடுத்துக் கொண்டுள்ளார் எனவும் புதிய கண்ணோட்டத்தில் இயேசு உலகில் பிறந்து தமது இரத்தத்தைச் சிந்தி உலக மீட்புக்காக தன்னை அர்ப்பணித்தார். ஆனாலும் உயிர்த்த இயேசுவின் பிரதிபலிப்பாக நம் இறைவன் இருக்கிறார்... உலகம் இயங்குகிறது.... திருச்சபை உருவாகியுள்ளது என்பதை அனுபவிக்கிறோம்.

திருச்சபை புனிதமானது... திருவருட்சாதனங்களை இறை மக்களுக்கு வழங்கி ஒழுக்க விழுமிய நெறியில் வாழ வைக்கிறது... பணி அமைப்புகளை உருவாக்கி இயங்குகிறது... கடவுளை அடையக் கூடிய பார்வையை எமக்கு காட்டுகிறது என்பதையும் திரு.பொன்.லோரன்ஸ் அவர்கள் தெளிவு படுத்தினார்.

அன்று மாலையிலிருந்தே ஏற்கனவே கூறிய படி கலாநிதி.ஜான் பொஸ்கோ, திரு.மரிய மிக்கேல், திரு.பொன்.லோறன்ஸ், திருமதி.பெர்ணத்தம்மா ஆகியோரினால் இலங்கையின் பங்குபற்றுனர்களுக்கும் பெங்களூரின் பங்குபற்றுனர்களுக்கும் 2ம் வத்திக்கான் சங்க ஏடுகள் தொடர்பான மேலதிக விரிவுரைகள் நிகழ்த்தினர். மதிய உணவின் பின் ஒரு மணி நேரமும் மாலை தேநீர் இடைவேளையின் பின் ஒரு மணி நேரமும் இவ் ஆற்றுகை நடைபெற்றது. இதனால் நாங்கள் ஏற்கனவே நடைபெற்ற அடிப்படைப் பயிற்சியையும் பெறக் கூடிய வாய்ப்பையும் பெற்றுக் கொண்டோம்.

அன்றிரவும் நிலா முற்றத்தில் எமது ஒன்றுகூடல் இடம் பெற்றது மிகவும் இறுக்கமான நிகழ்வுகளின் பின் தளர்வு நிலையை ஏற்படுத்தும் பொருட்டு பங்குபற்றுனர்களின் திறமைகள் வெளிப்படுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது.

நான்காம் நாள் காலையில் அருட்பணி.எக்ஸ்.ரீ.செல்வராஜா அவர்கள் தூத்துக்குடியிலிருந்து வருகை தந்து செயலமர்வைத் தொடர்ந்தார். ஆஜானபாகுவான ஆறடி தாண்டிய உயரம் கைத்தறி வேட்டி, ஜிப்பாவுடன் மிகவும் அமைதியாக... ஆழமாக தனது கருத்துக்களை முன்வைத்தார். குருமடத்தின் விரிவுரையாளரான இவர் பல ஆழமான விடயங்களை இலகுவாக விளக்கினார்.கிறிஸ்தவம் என்பது "மனித முன்னேற்றத்திற்காகவும், சமூக நீதிக்காகவும், மக்களின் விடுதலைக்காகவும், புதிய சமுதாயத்தை உருவாக்கவும் உழைத்துப் போராடும் வழிமுறையாகும். வாழக்கையை நாம் நேர் நிலையில் நின்று பார்க்க வேண்டும். இறைவனால் ஒவ்வொரு பொழுதும் எமக்கு கொடையாக வழங்கப்பட்டுள்ளது. மனிதர்களிடையே வேறுபாடு எதுவும் இருப்பதாக கிறிஸ்தவம் கூறவில்லை. ஆனாலும் ஆண்கள், பெண்கள் வேறுபாடு உண்டு. அது மேல், கீழ் என்ற வேறுபாடாக இருக்கக் கூடாது 'எவர் ஒருவர் தனக்கு கீழ் தனக்கு குற்றேவல் செய்ய இன்னொருவர் இருக்கிறார் என்று சொல்கிறாரோ அவர் விடுதலை பெற்ற மனிதரல்ல' "அறிவு ஆண்டவரைத்தேடலாம் ஆனால் அன்புதான் அவரை காண உதவும்" தந்தையிடமிருந்து பெற்றுக்கொள்வது நிபந்தனையற்ற அன்பாகும் அந்த அன்பை பிறருக்கு வழங்குங்கள் அதனூடாக இறை அன்பை காண்பீர்கள் நல்லது செய்யத் தெரிந்திருந்தும் செய்யத்துணியாதது தான் பாவம் இவ்வாறு பல நல்ல கருத்துக்களை எடுத்துக்கூறியுள்ளார்

அன்று பகலுணவாக ஜீரக சோறும் வாத்து முட்டைகறியும் வழங்கப்பட்டது. வித்தியாசமான சுவை தமிழ்நாட்டு அன்பர்கள் மிகவும் சுவைத்து உண்டனர் ஆனால் எமக்கு தான் சீரகத்தின் மணமும் பெரிய முட்டையும் சற்று அந்நியமாகத்தான் தெரிந்தது.

பிற்பகலில் திருமதி பெர்ணத்தம்மா அவர்கள் பொது நிலையினரின் பங்களிப்பு என்ற தலைப்பில் செயலமர்வைத் தொடர்ந்தார்..... எப்போதுமே கண்களை மூடிக்கொண்டே உட்கார்ந்த படி விடயங்களை தெளிவுபடுத்தினார்.

1ம்,2ம்,3ம் நூற்றாண்டுகளில் பொது நிலையினரின் பொதுக் குருத்துவத்தை ஏற்றுள்ளனர். 4ம் நூற்றாண்டில் தூய அகுஸ்தினாரின் இறையியல் கருத்து நிலைத்திருந்தது. ஞானஸ்தானம் பெற்ற அனைவருக்கும் குருத்துவம் என்ற கருத்து ஏற்கப்பட்டிருந்தது. இவ்வாறாக அடுத்து வந்த ஒவ்வொரு நூற்றாண்டுகளிலும் திருச்சபையில் பொதுநிலையினர் சார்பாக ஏற்பட்ட மாற்றங்கள் பற்றி விளக்கமாக எடுத்துரைத்தார். பின்பு மூன்று குழுக்களாக பங்கு பற்றுனர் பிரிக்கப்பட்டு அவர்களிடம் 3 ஒப்படைகள் வழங்கப்பட்டன.

1.சமுதாயம், சமயம் என்பவற்றிக்கான தொடர்புகள் என்ன?

2.சமுதாயம், சமயம் என்பன ஒன்று மற்றொன்றை எப்படிப் பாதிக்கின்றது?
எப்படிப்பட்ட பாதிப்பை ஏற்படுத்த வேண்டும்?

3.இயேசு அடிப்படையிலேயே ஒரு புரட்சியாளர். இது சரியா? சரியில்லையா?

குழுக்களின் வெளிப்படுத்தலில் பின்வரும் விடயங்கள் எடுத்துரைக்கப்பட்டன.

"சமுதாயத்தில் நாம் வாழ்வுப் பொருளாக உள்ளோம். சமய வாழ்வின் வழிபாடு அன்பின் கொண்டாட்டமாக எம்மை வழிப்படுத்துகின்றது. சமயத்தின் சட்டம் எல்லாம் அன்பின் வெளிப்பாடு ஆகிவிடுகின்றது. சமுதாயத்தின் கோட்பாடுகள் பிரிவினையை ஏற்படுத்தும். ஆனால் சமயம் நம் வாழ்வின் இறுதிப் பொருளைச் சுட்டிக்காட்டுகின்றது. அதை இன்றைக்கு கடைப்பிடித்தால் தான் நீங்கள் வாழ்பவர்கள். இல்லையேல் நீங்கள் இருப்பவர்கள்" சுவாரஷ்யமாகவும் ஆழமாகவும் திருமதி.பெர்ணத்தம்மாவின் கருத்துக்கள் எம் சிந்தனையை தூண்டின.

~தொடரும்

# மிருதுச்செடி (நறுமணச்செடி)

இந்த செடி அதனுடைய சிறப்பாக நறுமணத்திற்கு புகழ் பெற்றது. இவ்வகை செடிகளின் இலைகளிலும் நறுமணத் தைலம் இருந்ததால், அவை மெலிதாகக் கண்ணாடி போன்று ஒளி ஊடுருவும் தன்மையில் இருந்ததோடு மருந்தாகவும் பயன்படுத்தப்பட்டன. இஸ்ரயேல் நாட்டினரின் கூடாரத் திருவிழாக்களில் இந்த செடிகளின் கிளைகள் பயன்படுத்தப்பட்டன. யோசுவாவின் காலத்தில், கிரியத்து எயாளிம் என்ற மலைப்பகுதி இருந்ததாக யோசுவா 15:9இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், நெகேமியா 8:16 இத்தகைய நறுமணச்செடியின் கிளைகளைக் கொண்டு வந்து மக்கள் கூடாரங்கள் அமைத்ததாகக் கூறப்பட்டுள்ளது. இந்த செடியானது, நன்கு ஈரப்பதம் உள்ள மண்ணில் வளரும் தன்மையுடையது. எனவே தான் பாலை நிலம் சோலை வனம் ஆகும் என்ற கூறிய எசாயா இறைவாக்கினர் 41: 19இல் மிருதுச்செடி, ஒலிவ மரம் ஆகியன தோன்றச் செய்வேன் என்கிறார்.

கடின உள்ளம் கொண்டோரும், ஆண்டவரின் நன்மை தனங்களில் பங்கு கொள்ளும் போது, அவரது அமைதியால் நிரப்பப்பட்டு, இருளினின்று ஒளிக்கு வருவார்கள் என்பதை எசாயா 55: 13இல் 'காஞ்சொறிக்குப் பதிலாக, நறுமணச்செடி துளிர்த்து வளரும்' என்ற இறைவாக்கு உரைக்கிறார். இறைவாக்கினர் செக்கரியா இரவு நேரத்தில், முதன் முதல் கண்ட காட்சியை செக்கரியா 1:8~11இல், ஆண்டவரின் தூதர், பள்ளத்தாக்கின் நடுவே, நறுமணம் வீசும் பசும் செடிகள் இடையே நின்று கொண்டிருந்தார் என்று வர்ணிப்பதன் மூலம், இந்த மிருதுச்செடி அல்லது நறுமணச்செடி, பள்ளத்தாக்ககளில் அதிகம் வளர்ந்தது என்பதை அறிந்து கொள்ள முடியும்.

# நீனாக்கேணி கிராமத்தில் வீடுகள் கையளிக்கும் நிகழ்வு.

திருகோணமலை எகெட் கரித்தாஸ் நிறுவனத்தின் அனுசரணையில் மூதூர் பிரதேச சபைக்கு உட்பட்ட நீனாக்கேணி கிராமத்தில் வாழ்கின்ற 51 குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் கையளிக்கும் நிகழ்வு 23.10.2017 அன்று நடைபெற்றது. இந் நிகழ்விற்கு பிரதம அதிதியாக கிழக்கு மாகான ஆளுநரும், கௌரவ அதிதியாக சுவிஸ் தூதுவரும், விசேட அதிதியாக கரித்தாஸ் நிறுவனத்தின் தேசிய இயக்குனரும், திருகோணமலை மறைமாவட்ட ஆயரும், திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் மூதூர் பிரதேச செயலாளர் உட்பட பலரும் கலந்து சிறப்பித்தனர்.





புகைப்படம் 12ம் பக்கத்தில்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவ்வாண்டு கருப்பொருளும், கிறிஸ்மஸ் சிறப்புப் போட்டியும் ~ 2017

❖எவரும் பங்குபற்றலாம்.
❖இவ் வினாக்கள் 2016 டிசெம்பர் முதல் 2017 அக்டோபர் மாதம் வரையான திருமலைத்தீபம் பத்திரிகையிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.
❖விடைகளை இப்பேப்பரிலே எழுதி அனுப்பவும்.
❖போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
❖எல்லாவற்றிற்கும் சரியாக விடையளித்தவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படும். (1ம், 2ம். 3ம் பரிசுகள்)
❖எல்லாரும் சரியாக பதில் அளித்தால் குலுக்கள் முறையில் பரிசில்கள் வழங்கப்படும்.
❖பரிசில்கள் முறையே
1ம் பரிசு 1000/- ரூபா, 2ம் பரிசு 750/- ரூபா, 3ம் பரிசு 500/- ரூபா
❖ அனுப்ப வேண்டிய முடிவுத் திகதி 06.01.2018

## தூய மத்தேயு நற்செய்தி

01. 'மத்தாயோஸ்' என்பதன் பொருள் யாது?
விடை:..............................

02. 'மத்தேயு நற்செய்தி' என்ற தலைப்பு எப்போது தோன்றியது என அறிஞர்கள் கருதுகிறார்கள்?
விடை:..............................

03. தூய மத்தேயு நற்செய்தியில் குறிப்பிடப்பட்டிருக்கும் மூதாதையர் பட்டியல் யார் தொடங்கி யார் வரைக்கும் முடிவடைகின்றது? இதில் காணப்படும் தலைமுறைகளின் எண்ணிக்கை யாது
விடை:..............................
..............................

04. தூய மத்தேயு நற்செய்தியில் உள்ளடக்கப்படும் விடயங்கள் யாவை?
விடை:..............................
..............................
..............................

05. தூய மத்தேயு நற்செய்தியின் படி இயேசுவுக்கு வழங்கப்பட்ட கருஞ்சிவப்பு அங்கியும், கோலும் எதனைக் குறித்து நிற்கின்றன?
விடை:..............................

06. இயேசு இறந்த போது நடைபெற்ற சம்பவங்கள் எவை?
விடை:..............................
..............................
..............................

07. இயேசுவின் வார்த்தைகளை ஏற்று அவரைப் பின்பற்றிய யூதர்கள் எத்விதம் அழைக்கப்பட்டனர்?
விடை:..............................

08. தூய மத்தேயு நற்செய்தியின்படி 'மலைப்பொழிவு' எத்தனையாம் அதிகாரங்களில் காணப்படுகின்றது?
விடை:..............................

09. 'என் இல்லம் இறைவேண்டலின் வீடு: என்று இயேசு எதனைக் குறிப்பிடுகிறார்?
விடை:..............................

10.நோன்பு என்பது என்ன?
விடை:..............................
..............................
..............................

11. 'இயேசு இறையரசை அறிவித்தார்' எனக் கூறும் விவிலிய அறிஞர் யார்?
விடை:..............................

12. கிறிஸ்துவின் ஆட்சி எப்படிப்பட்டதாக இருக்குமென தூய மத்தேயு நற்செய்தியாளர் குறிப்பிடுகிறார்?
விடை:..............................
..............................
..............................

13.செபம் பற்றி தூய மத்தேயு 18:19 ~ 20இல் குறிப்பிடப்படும் வாக்கியத்தை எழுதுக?
விடை:..............................
..............................
..............................

14. இயேசுவுக்கும் ~ மலைக்கும் உள்ள தொடர்பு எவ்விதம் காட்டப்பட்டுள்ளது?
விடை:..............................
..............................
..............................

15. தூய மத்தேயு நற்செய்திக்கே உள்ள தனித்துவமான உவமைகள் எவை?
விடை:..............................
..............................
..............................

பெயர்:..............................
பங்கு :..............................
முகவரி :..............................

## குடும்ப அருட்பணிகள்

01. இஸ்ரயேல் இனத்தின் தலையாய குடும்பங்கள் எவை என விவிலியம் கூறுகின்றது?
விடை:..............................
..............................
..............................

02. 'தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்' என்ற பழமொழிக்கு விளக்கம் தரும் பழைய ஏற்பாட்டின் விவிலியப் புத்தகம் எது?
விடை:..............................

03. திருக்குடும்பத்தில் காணப்பட்ட முக்கிய பண்புகள் எவை?
விடை:..............................

04. திருமணத்தின் இரு இயல்புகளும் எவை?
விடை:..............................

05. 'அன்பின் மகிழ்ச்சி' என்னும் சுற்றமடலை எழுதிய திருத்தந்தை யார்?
விடை:..............................

06. ஒரு குடும்பத்தில் அடித்தளங்கள் யார்? உயிருள்ள கற்கள் யார்?
விடை:..............................

07. திருமணம், குடும்பம் என்பவற்றின் மாண்பை பேணி வளர்ப்பதில் அக்கறை கொண்ட சங்கம் எது?
விடை:..............................

08. 'கணவன், மனைவிக்கிடையிலான அன்பின் உண்மை என்பது சிலுவையில் அறையப்பட்ட கிறீஸ்துவின் அன்பால் மட்டுமே முழுமையாக ஒளியூட்டப்படுகின்றது.' என்னும் வசனம் எந்த திருத்தந்தையால்? எச் சுற்றமடலில் கூறப்பட்டுள்ளது?
விடை:..............................

09. கிறீஸ்துவின் குடும்ப வாழ்வானது எத் திருவருட்சாதனத்தின் மூலம் ஆரம்பிக்கின்றது?
விடை:..............................

10. 'கணவன் மனைவிக்கிடையே இருக்கக் கூடிய ஆழமான அன்புறவை இறைவன் இஸ்ரயேல் இனத்தோடு ஒப்பிடுகிறார்? இதைப் பற்றிக்கூறும் இறைவாக்கினர்கள் இருவர் யார்?
விடை:..............................

11. 'கடவுள் அவர்களுக்கு ஆசி வழங்கி பலுகிப் பெருகி மண்ணுலகை நிரப்புங்கள்.' என்ற கூற்று விவிலியத்தில் எந்தப் புத்தகம். எவ் அதிகாரம். வசனத்தில் காணப்படுகின்றது?
விடை:..............................

12. குடும்பமாக செபிக்கும் போது எம்மை நாடி வரும் நன்மைகள் எவை என ஆவணி மாத திருமலைத் தீபத்தில் குறித்துக் காட்டப்பட்டுள்ளது?
விடை:..............................
..............................
..............................

13. 'ஏடேன்' என்ற எபிரேயச் சொல்லுக்கு என்ன பொருள் கொடுக்கின்றனர் விவிலிய வல்லுனர்கள்?
விடை:..............................

14. குடும்ப வாழ்வுக்கு அவசியமான விடயங்கள் எவை?
விடை:..............................

15. 'விலா எலும்பிலிருந்து ஏவாள் உருவாக்கப்பட்டாள்' என்பதிலிருந்து விளங்கிக் கொள்வது யாது?
விடை:..............................

பெயர்:..............................
பங்கு :..............................
முகவரி :..............................

## சிறுவர்களுக்கான
## நிறம் தீட்டுதல் போட்டி

பாலர் முதல் தரம் 5 வரையுள்ள மறைக்கல்வி மாணவர்களுக்கு.
திருமலைத்தீபத்தில் தரப்படும் படத்திற்கு நிறம் தீட்டுதல் வேண்டும் போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
1,2,3ம் இடங்களைப் பெறுபவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும்
1ம் பரிசு - 500/= 2ம் பரிசு - 300/= 3ம் பரிசு - 200/=



பெயர் ..............................
முகவரி ..............................
பங்கு ..............................
முடிவுத் திகதி 06.01.2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உயிர்தெழுதலும் வாழ்வும் நானே, என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பிலும் வாழ்வார். உயிரோடு இருக்கும் போது என்னிடம் நம்பிக்கை கொள்ளும் எவரும் என்றுமே சாகமாட்டார்.

யோவான் 11: 25-26

தகவல் : Sr. L. டெய்சி
நிலாவெளி - 03

## தூய வின்சன் டி பவுல் சபையினர்
### செல்வநாயகபுரம்



## நீனாக்கேணி கிராமத்தில்
## வீடுகள் கையளிக்கும் நிகழ்வு



## தேசிய ரீதியிலான
## விவிலிய அறிவுப்போட்டி









## தூய வின்சன் டி பவுல் சபையினர்
## 50 வருட யூபிலி பெருவிழா



### கும்புறுபிட்டி தூய பிரான்சிஸ் சவேரியார் ஆலயத்தில்
## திருவிவிலியக் கண்காட்சி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்கு மனிதர் ஆனார் நம்மிடையே குடி கொண்டார். (யோவான் 1: 14)